பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆடி 22 புதன்கிழமை 07.08.2019 | கதிர் 275

**இனி இது ரகசியம் அல்ல!**

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியை யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் நியமிக்கும் சர்ச்சை தொடர்பான விடயத்தில் தனது கருத்து நிலைப்பாட்டைக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பக்கம் 02

# நானே ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் ஏற்கனவே வாக்குறுதி தந்துவிட்டார் ரணில்

## அடித்துக் கூறுகின்றார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவின் வேட்பாளராக நானே களமிறங்குவேன். அரசியல் குழப்பத்தின்போது, ரணில் அந்த வாக்குறுதியைத் தந்திருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவே களமிறங்குவார்.

– இவ்வாறு ஐ.தே.கவின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ பக்கம் 11

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கான பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்கின்றது!

## தெரிவுக்குழு முன்னிலையில் பிரதமர் சாட்சியம்



கொழும்பு, ஓக. 07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கான பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்கின்றது. பாரதூரமான இதில் இருந்து ஓடி ஒளிந்துவிடமுடியாது.

– இவ்வாறு நேற்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும்போது தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பக்கம் 11

## கோட்டாவே ஜனாதிபதி!

### அடித்துக் கூறுகிறார் மஹிந்தானந்த



கொழும்பு, ஓக. 07

2020ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக கோட்டாபயவே தெரிவு செய்யப்படுவாரென நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பக்கம் 11

## கோட்டாவைச் சந்தித்த ஐ.தே.க. அமைச்சர்கள்!

கொழும்பு, ஓக. 07

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் தாம் இரகசியச் சந்திப்பை நடத்தவில்லை என துறைமுகங்கள், பக்கம் 11

## மஹிந்த குறித்து சுதந்திரக் கட்சி விரைவில் தீர்மானம் எடுக்குமாம்!

### கூறுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஓக. 07

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் அவர் தொடர்பில் நடைமுறை ரீதியிலான தீர்மானமொன்றை எடுக்க நேரிடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் பக்கம் 02

## ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கவேண்டும்!

### கோருகின்றார் சிவாஜிலிங்கம்



கொழும்பு, ஓக. 07

சிங்கள அரசியல்வாதிகள் தமிழர்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி வருவதால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பக்கம் 02

## ஜனாதிபதி – அரசு முரண்பாட்டு நிலையே பாதுகாப்பு உறுதியின்மைக்குக் காரணம்!

### அமைச்சர் ருவான் நேற்றுச் சாட்சியம்



கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாடுகளே பாதுகாப்பு அமைச்சின் நிலையற்ற, உறுதியற்ற நிலைக்கு காரணம் எனதான் உணர்கிறார் என்று பாதுகாப்பு இரா பக்கம் 11

## எம்.பிக்களுக்கு மேலும் ரூபா 2 லட்சம் யோசனையை நிராகரித்தார் மைத்திரி

கொழும்பு, ஓக. 07

எம் பிக்களுக்கு மாதம் 4 லட்ச ரூபாவுக்கு மேல் கிடைக்கிறது. இதற்கும் மேலதிகமாக 2 லட்சம் ரூபா வழங்கும் யோசனையை அமைச்சரவையில் நிராகரித்தேன்.

– இவ்வாறு பக்கம் 11

## மைத்திரி – மஹிந்த திங்கள் இரவு அவசரமாகச் சந்தித்துப் பேச்சு!



கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் அவசர சந்திப்பொன்று பக்கம் 02

## யாழ்.மாநகர உணவகங்களில் நேற்றுத் திடீரெனச் சோதனை

### 76 உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு



யாழ்ப்பாணம், ஓக. 07

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட 107 உணவகங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்றுச் சோதனைக்கு உட்படுத்தப் பக்கம் 11

## ரவி கருணாநாயக்காவால் அமைச்சரவையில் லடாய்

கொழும்பு, ஓக. 07

துருக்கிய நிறுவனத்துக்குச் சொந்தமான இரண்டு மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் வாங்குவது குறித்து சட்டமா பக்கம் 11

## குஞ்சுக்குளம் பகுதியில் கஞ்சாவுடன் மூவர் கைது

வவுனியா, ஓக. 07

செட்டிகுளம் – குஞ்சுக்குளம் பிரதான வீதியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் பயணித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் பக்கம் 11

காலைக்கதிர் Kalaikkathir



# ரஷ்ய - இலங்கை தரைப்படைகளின் தளபதிகள் மொஸ்கோவில் சந்திப்பு



கொழும்பு, ஓக. 07

ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, ரஷ்ய தரைப்படைகளின் தளபதி ஜெனரல் ஒலேக் சல்யுகோவ்வை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். மொஸ்கோவில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பில் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலகவும், இலங்கை இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

# ஐ.தே.கவுக்கு சு.க. ஆதரவு வழங்காது

கொழும்பு, ஓக. 07

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு, ஆதரவு வழங்கப் போவதில்லை என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொடர்ந்து ஐ.தே.கவுக்கு எதிரான கட்சி என்ற வகையிலேயே, சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி களமிறக்கும் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் தமது கட்சி ஆதரவு வழங்கப் போவதில்லை – என்றார். (ஐ)

# எந்தச் சக்திக்கும் அஞ்சமாட்டேன்!

## பேராயர் மல்கம் சூளுரை

கொழும்பு, ஓக. 07

நான் எந்தவொரு சக்திக்கும் பயப்படமாட்டேன். நான் எப்பொழுதும் உங்களுடனேயே உள்ளேன் எனப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கட்டுவாபிட்டிய பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த புனித செபஸ்தியார் சிலை மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சு தாக்குதலையடுத்து, ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து அங்கு சென்ற கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பிரதேசவாசிகள் முன்னிலையில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கட்டுவாபிட்டிய தேவாலயம் மற்றும் ஏனைய தேவாலயங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக, உண்மையை அறிந்து கொள்வதற்கு உங்களுக்கு உள்ள உரிமையை நான் நன்கு அறிவேன் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

### மஹிந்த குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இதுவரை அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான அழைப்பு விடுக்கப்பட்டால் அது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# கச்சாய் வீதியில் கஞ்சா சிக்கியது

கொழும்பு, ஓக. 07

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வீதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது 31கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையின் புலனாய்வு அதிகாரிகள் இவற்றைக்கைப்பற்றி கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் எனக் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

சந்தேகநபர் அந்தப்பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் அவரைக்கைதுசெய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 60 இலட்சம் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது. (ஐ)

# சுஷ்மா சுவராஜ் காலமானார்



புதுடில்லி, ஓக. 07

முன்னாள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் திடீர் உடல்நலக் குறைவு காரணமாக நேற்றுச் செவ்வாய்க் கிழமை இரவு காலமானார்.

உடல்நலக்குறைவு காரணமாக சுஷ்மா சுவராஜ் 2019 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. அவர் கடைசியாக நேற்றுப் பகிர்ந்திருந்த டுவிட்டர் பதிவில், நன்றி பிரதமர். மிகவும் நன்றி. என் வாழ்நாளில் இந்த நாளுக்காகதான் காத்திருந்தேன் என்று காஷ்மீர் விவகாரம் தொடர்பாகப் பதிவிட்டு இருந்தார்.

1952ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி பிறந்த சுஷ்மா சுவராஜுக்கு 67 வயது. வழக்கறிஞரான சுஷ்மா சுவராஜ் பா.ஜ.கவின் டெல்லி முதல்வராக 1998ஆம் ஆண்டு சிறிது காலம் பதவி வகித்து இருக்கிறார். இந்திராகாந்தி ஆட்சிக் காலத்தில் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து போராடிய சுஷ்மா, 25 வயதிலேயே ஹரியானா மாநில அமைச்சராக பதவி ஏற்றார். 1990ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினரானார். 1996 ஆம் ஆண்டு இந்திய 11ஆவது மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒளிப்பரப்புத் துறை, குடும்ப நலம், வெளியுறவு என பல்வேறு துறைகளில் அமைச்சராகப் பணியாற்றி இருக்கிறார். டுவிட்டரில் தொடர்ந்து இயங்கிய இவர், டுவீட் மூலம் தமக்கு வைக்கப்படும் கோரிக்கைகளையும் நிறைவேற்றி இருக்கிறார்.

இந்திய அரசியலின் மகத்தானதொரு அத்தியாயம் முடிவுக்கு வந்துள்ளது என இந்திய பிரதமர் நரேந்திர மோடி டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். மிக சிறந்த அரசியல் தலைவர், பேச்சாளர் மற்றும் கட்சிக்கு அப்பாற்பட்டு நல்லுறவு பேணிய நாடாளுமன்ற உறுப்பினரான சுஸ்மா உவராஜ் காலமானதை அறிந்து அதிர்ச்சியுற்றேன் என ராகுல் காந்தி ட்விட்டர் பதிவிட்டுள்ளார். மேலும், இந்த துக்கமான நேரத்தில் அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன். அவரது ஆன்மா அமைதியில் இளைபாறட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# போதைப்பொருள் வழங்கினால் மாத்திரமே தாய்ப்பாலூட்டுவேன்

## பொலிஸார் முன்னால் அடம் பிடித்த தாய்

கொழும்பு, ஓக. 07

போதைப் பொருள் வழங்கினால்மட்டுமே, தனது குழந்தைக்குத் தாய்ப் பாலூட்டுவேன் என தாயொருவர் அடம்பிடித்த சம்பவம் மின்னேரியா பொலிஸ் நிலையத்தில் பதிவாகியுள்ளது.

மின்னேரியா, பட்டபிலிகந்த பிரதேச வீடொன்றுக்குள் போதைப் பொருளைப் பயன்படுத்திய நிலையில், பெண்ணொருவரும் ஆண்கள் இருவரும் நேற்று முன் தினம் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனைடுத்து சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும், அந்தப் பெண்ணின் ஒரு வயதுக் குழுந்தை நேற்றுக் காலை தாயிடம் பால் கேட்டு அழுதபோது, தனக்குப் போதைப் பொருள் வழங்கும் வரை குழந்தைக்குப் பாலூட்டமாட்டேன் எனப் பொலிஸாரிடம் தாயார் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குழந்தைக்கு பால்மாவை வழங்கப் பெண் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடும் வேட்பாளர்களைத் தமிழர்கள் புறக்கணிக்கவேண்டும் என வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தனது கோரிக்கையை ஏற்று எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் சரியான தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும் எனவும், மாறாக தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை தான் பறித்தெடுக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

முடிந்தால் எதிர்வரும் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்கத் தயார் எனத் தெரிவித்துள்ள அவர், தேர்தலை புறக்கணிக்குமாறு தான் கேட்பது சர்வாதிகாரமாக அமையாது எனவும் தெரிவித்தார்.

தற்போதைய நல்லாட்சி அரசு கடந்த நான்கரை வருடங்களில் கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை என்பதால் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் தெளிவானதும், காத்திரமானதுமான முடிவை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (ஐ)

### மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் திங்கட் கிழமை இரவு ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்பில் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைத் தவிர வேறொருவரும் கலந்துகொள்ளவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் உட்பட சமகால அரசியல் விடயங்கள் குறித்து இதன்போது முக்கியமாகப் பேசப்பட்டன என்று இருதரப்பின் வட்டாரங்களிலிருந்தும் அறியமுடிந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பதற்கு 5 நாட்களே உள்ள நிலையில் நேற்று முன் தினம் இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

நேற்று முன் தினம் இந்தப் பேச்சு இடம்பெறுவதற்கு முதல் நாள் தொலைபேசி ஊடாகப் பல தடவைகள் இருவரும் உரையாடினார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

மத்திய சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் ஒரு மருத்துவ சேவை அதிகாரியை, அதற்கு மேலதிகமாக மாகாண சபையின் கீழ்வரும் வைத்திய நிர்வாக சேவையின் பதவிக்கு நியமிக்கின்றமை மாகாணத்தின் அதிகாரத்தை மத்திய அரசு பிடுங்குவதற்கு ஒப்பானதாகும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி கொள்கை ரீதியாகக் குரல் எழுப்ப –

அதற்கு மாறாக, அந்தச் செயற்பாட்டுக்குப் பச்சைக் கொடி காட்டுவது போல சுமந்திரன் செயற்படுகிறார் என்றச்சாரப்படக் கருத்துகள் பிரதிபலிக்கப்பட்டமையால் இவ்விடயம் குறித்துத் தமது நிலைப்பாட்டை சுமந்திரன் எம்.பி. பகிரங்கப்படுத்தித் தெளிவுபடுத்த வேண்டும் என்று நேற்று முன்தினம் இப்பத்தியில் குறிப்பிட்டோம்.

“இவ்விடயம் எமது இதழில் வெளியான கையோடே சுமந்திரன் எம்.பி. தொடர்பு கொண்டு தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

இவ்விடயத்தில் கட்சியில் ஏனையோரின் நிலைப்பாடுதான் என்னுடையதும். மருத்துவர் சத்தியமூர்த்திக்கு எதிரானவர்கள் அல்லர் நாங்கள். ஆனால் இத்தகைய இரட்டை நியமனம், மாகாண நிர்வாகத்தின் அதிகாரங்களை மத்திய அரசு பிடுங்குவதான அர்த்தத்தையே தரும். ஆகையினால்அதனை நாம் ஏற்கவே முடியாது.

“இந்த விவகாரம் குறித்து வடக்கு ஆளுநருடன் நான் ஒரு வசனம் கூட பேசியவன் அல்லன். ஆகவே வடக்கு ஆளுநர் இவ்விடயம் குறித்து என்னோடு ஆலோசித்தார் என்றோ கலந்துரையாடினார் என்றோ கூறுவது தவறு.

“ஆனால், மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவுடன் இவ்விடயம் குறித்து நான் நேரில் பேசினேன். இப்படி இரட்டை நியமனம் செய்வது வீண் குழப்பங்களைத் தரும், அதைச் செய்ய வேண்டாம் என்றேன். யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிப்பதற்கு பொருத்தமானவர் ஒருவரைப் பரிந்துரைக்கும்படி அவர் என்னிடம் கேட்டார். மாகாண நிர்வாகத்துக்குள் வரும் பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் குகதாஸை யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளராக நியமிக்கலாம் என்று நான் பரிந்துரைத்தேன். அதனையடுத்து எனக்கு முன்னாலேயே மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரை அமைச்சர் டாக்டர் ராஜித சேனரத்ன தொடர்பு கொண்டார். மேற்படி மருத்துவர் குகதாஸனை யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்க நடவடிக்கை எடுக்கும்படி தமது அமைச்சின் செயலாளரைப் பணித்தார் அமைச்சர் ராஜித.

“இப்படி நான் வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் செயற்படுகையில், அதற்கு மாறான நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன் என்ற சாரப்பட நீங்கள் செய்தி வெளியிடுவது பொருத்தமேயற்றது.” – என்றார் சுமந்திரன்.

சுமந்திரன் தன்நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று நாம் விடுத்த கோரிக்கை கிடைத்ததும் உடனடியாக எம்முடன் தொடர்பு கொண்டு விளக்கமளித்த சுமந்திரனுக்கு எமது நன்றிகள்.

- மின்னல் -

# தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் மஹிந்த ராஜபக்ஷ முக்கிய பேச்சு

## ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் ஆராய்வு

கொழும்பு, ஓக. 07

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், தமிழ்க் கட்சிகள் சிலவற்றிற்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இதில் தெற்கு இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, தினேஷ் குணவர்த்தன தரப்புக்கும் தமிழ்க் கட்சிகள் சிலவற்றிற்குமிடையில் கடந்த சில வாரங்களாகச் சந்திப்புக்கள் நடந்து வந்தன. ஏற்கனவே இரண்டு தரப்பும் இரண்டு முறை சந்தித்து பேசியிருந்தன.

ஈ.பி.டி.பி, சிறிரேலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி, ஈரோஸ், பிரபா கணேசன் தரப்பு, அருண்தம்பிமுத்து தரப்பு ஆகியன இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டன.

சில வாரங்களுக்கு முன்னர், இந்தத் தமிழ்த் தரப்புக்கள் பஸிலை ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசியிருந்தன.

இதன் தொடர்ச்சியாக, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பின்னர் பொதுஜன பெரமுன எதையெல்லாம் நிறைவேற்றும் என்பதை கலந்துரையாடி அவற்றைத் தேர்தலின் முன்பாக மக்களுக்கு அறிவிப்பதே இந்தச் சந்திப்பின் நோக்கம்.

இதன்போது, ஒவ்வொரு கட்சியினரும் ஒவ்வொரு விவகாரங்களை தெரிவித்தனர். கடந்த சந்திப்புக்களில் மஹிந்த தரப்பிடம் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தல், அரசியல் கைதிகள், காணி உள்ளிட்ட விடயங்களை அழுத்தமாக ஈ.பி.டி.பி வலியுறுத்தியிருந்தது.

சந்திப்பில் விடயங்களை ஒருங்கிணைந்து வெளிப்படுத்துவதில் முன்கூட்டிய திட்டங்கள் இருக்கவில்லை. ஆளாளுக்கு ஒவ்வொன்றை பேசிக் கொண்டிருந்தார்கள். இதனாலோ என்னவோ, ஈ.பி.டி.பி தரப்பிலும் நேற்றுமுன்தினம் மேலோட்டமாகவே உரையாடப்பட்டது.

வடக்கு – கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நிரந்தர வாழ்வாதாரத்துக்குப் பொறிமுறை, யாழ் குடாநாட்டிற்கு குடிதண்ணீர், தீவகத்தில் ஆடைத்தொழிற்சாலைகள், உடனடியாக வடக்கு – கிழக்கில் தமிழ்ப் பொலிஸார், வேலைவாய்ப்பு உள்ளிட்ட விடயங்களை ஈ.பி.டி.பி குறிப்பிட்டது.

தமிழ்ப் பொலிஸார் பற்றி குறிப்பிட்டபோது, தனது முன்னைய ஆட்சிக்காலத்திலும் தமிழ் இளைஞர்களை பொலிஸ் சேவைக்கு உள்ளீர்க்க முயன்றதாகவும், ஆனால் அதை தமிழ் இளைஞர்கள் ஆதரிக்கவில்லையென்றும் மஹிந்த குறிப்பிட்டார்.

முழுமையான வீட்டுத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமெனப் பிரபா கணேசன் குறிப்பிட்டார்.

வடக்கு – கிழக்கில் இளைஞர்கள் அதிகமானவர்கள் வெளிநாட்டுக்கு போகிறார்கள். போக விரும்புகிறார்கள். இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முறையான வேலைவாய்ப்பை உருவாக்கினால் அதை தடுக்கலாம் என வரதராஜப் பெருமாள் குறிப்பிட்டார்.

சிங்கள இளைஞர்களும்தான் வெளிநாடு போகிறார்கள். இது நாடு முழுவதுமுள்ள பிரச்சினை என மஹிந்த குறிப்பிட்டார்.

சந்திப்பு 7 மணிக்கு நடப்பதாக திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், சலிந்த திசாநாயக்க எம்.பியின் மரண வீட்டுக்குச் சென்று வந்ததால் மஹிந்த ஒரு மணித்தியாலம் தாமதமாகவே வந்தார். விஜேராம விலுள்ள அவரது இல்லத்தில் இரவு 8 மணி தொடக்கம் 9 மணி வரை இந்தச் சந்திப்பு நடந்தது.

சந்திப்பில் தமிழ் கட்சிகளால் வைக்கப்பட்ட முன்மொழிவுகளை, திஸ்ஸ விதாரணவின் ஊடாக ஆவணமாகத் தயாரித்து தருமாறு மஹிந்த குறிப்பிட்டார்.

அத்துடன், அடுத்த ஜனாதிபதியாக தமது தரப்பிலிருந்து யார் களமிறங்கினாலும், அந்த ஆட்சியைப் பின்னணியிலிருந்து தானே செயற்படுத்துவேன் என்பதால், வேட்பாளர் குறித்து தமிழ்த் தரப்புக்கள் அச்சமடைய வேண்டியதில்லையென்ற சாரப்பட மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இரண்டு தரப்பும் தொடர்ந்து நடத்தும் பேச்சில், பகிரங்கமாக குறிப்பிடப்படக் கூடியவை, பகிரங்கப்படுத்தாமல் செயற்படுத்துபவை என இரண்டு பட்டியல்களின் கீழ் விவகாரங்களை நிரல்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவோம் என்பதை பகிரங்கப்படுத்தப்படாத நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுத்த மஹிந்த முன்னதாக தெரிவித்தபோதும், அதைப் பகிரங்கப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுத்தவேண்டுமென ஈ.பி.டி.பி வலியுறுத்தியதாக தெரிகிறது.

இதன் பின்னணியிலேயே, அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மஹிந்த, அடுத்த தமது ஆட்சியில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவேன் எனக் குறிப்பிட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# சஜித் அணியினரின் புது அழுத்தம்; ஐ.தே.கவுக்கு மற்றொரு நெருக்கடி

கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. அமைக்கவுள்ள கூட்டணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் உள்ளடக்கவேண்டும் என ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் அணியினர் தற்போது வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுதந்திரக்கட்சியையும் கூட்டணியில் இணையுமாறு அழைக்க வேண்டும் என சஜித் பிரேமதாஸவின் வலுவான ஆதரவாளரான அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு நெருக்கமான வட்டாரம் ஒன்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும், புதிய கூட்டணியின் யாப்பை திருத்திய பின்னர் அது செய்யப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி சிறிசேன அண்மைய காலங்களில் ஐ.தே.கவை கடுமையாக விமர்சித்து வந்த நிலையில், சுதந்திரக் கட்சியையும் கூட்டணியில் சேர்க்கவேண்டும் என எழுந்துள்ள அழுத்தங்கள் கட்சியின் உயர்மட்டத்தினர் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# யாருமே எதிர்ப்பாராத ஒரு சம்பவம் ஜனாதிபதித் தேர்தலில் நிகழுமாம்!

## கூறுகிறார் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, ஓக.07

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது, யாருமே எதிர்ப்பாராத ஒரு சம்பவம் ஸ்ரீலங்கா பொது



ஜன பெரமுன தரப்பிலிருந்து நிகழப் போவதாக எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து அனைத்துச் செயற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன.

இப்போது, அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்க மட்டும்தான் வேண்டும். மஹிந்த அறிவிக்கும் வேட்பாளருக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான பேச்சுக்களும் நடந்துக் கொண்டுஇருக்கின்றன. ஆனால், அனைத்தையும் விட முக்கியமான ஒரு சம்பவம் விரைவில் நடக்கவுள்ளது.

இது தொடர்பிலான தகவல்களை நான் துளியளவும் வெளியிடமாட்டேன். அது மிகவும் முக்கியமான ஒன்றாகத்தான் கருதப்படுகிறது. இவ்வளவு தகவல்களை மட்டும்தான் இப்போதைக்கு என்னால் வெளியிட முடியும்.

எம்மைப் பொறுத்தவரை இந்த ஜனாதிபதித் தேர்தலை நாம் சவாலான ஒரு விடயமாகவே கருதவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவுகள் வந்துவிட்டன.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ இப்போதே தன்னை வேட்பாளராக அறிவித்துக்கொண்டு, பதாதைகளை வைக்க ஆரம்பித்துவிட்டார்.

எமக்கு இதனால் எவ்வித சிக்கலும் கிடையாது. நாம் யாருடைய ஆதரவையும் பெறப்போவதில்லை. நாம் வெற்றி பெற்றவுடன் பலர் எம்முடன் இணைவார்கள்.

ஆனால், யாருடன் இணைய வேண்டும் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும் – என்றார்.

# முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்று விக்கி கூறியிருக்கின்றமை அப்பட்டமான பொய்!

## சாடுகின்றார் தவராசா

அடிப்படைப் புரிதல் இல்லாமல் 13 ஆவது திருத்தச்சட்டம் வலுவற்றது என முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியிருக்கின்றமை வெட்கக்கேடானவிடயம் என வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

13 ஆவது திருத்தத்தில் அமைச்சர்களை நியமிக்கும் அல்லது நீக்குவது முதலமைச்சரின் பரிந்துரையில் ஆளுநர் என்ற விடயம் தெளிவாக கூறப்பட்டுள்ளதை அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

அத்தோடு மத்திய அமைச்சரவை நியமிக்கும் அல்லது நீக்கும் நடவடிக்கையும் இந்த நடவடிக்கையின் பிரகாரமே இடம்பெறுகின்றது என்பதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இவற்றைத் தெரிந்துகொள்ளாமல் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் தனக்கு அதிகாரம் இல்லை என கூறுவது அப்பட்டமான பொய் என்றும் தவராசா கூறினார்.

# ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு கட்சித் தலைமை வாய்ப்பூட்டு

கொழும்பு, ஓக. 07

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பாகப் பேசக்கூடாது என அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வேட்பாளர் தொடர்பாக தீர்மானிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வரை இந்த அறிவுறுத்தல் பின்பற்றப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வேட்பாளர் தொடர்பாகக் கூட்டணிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து முடிவை அறிவிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது சஜித் பிரேமதாஸ தன்னை வேட்பாளராக முன் நிறுத்தும் பிரசார நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றார்.

அத்தோடு கட்சி மட்டத்தில் கரு ஜயசூரியவுக்கு ஆதரவு பெருகியுள்ள அதேவேளை சஜித் பிரேமதாஸ இம்முறை வாய்ப்பைத் தவறவிடக்கூடாது எனக் காய் நகர்த்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மோடி அரசின் காஷ்மீர் அதிரடி

சுதந்திர இந்தியாவின் அரசியல் வரலாற்றில் மற்றொரு தீர்க்கமான – சர்ச்சைக்குரிய – முடிவை எடுத்து நடைமுறைப் படுத்தியிருக்கின்றது பிரதமர் நரேந்திர மோடியின் அரசு.

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370 ஆவது அரசியல் சட்டப் பிரிவை ரத்து செய்யும் முடிவை – உணர்வு பூர்வமான சிக்கல்களை ஏற்படுத்தும் தீர்மானத்தை – அதிரடியாக அறிவித்து, அவசர அவசரமாக நிறைவேற்றியிருக்கின்றது பாரத மத்திய அரசு.

கிழக்குப் பாகிஸ்தானுக்குள் பெரும் இராணுவப்படை எடுப்புடன் 1971 டிசெம்பரில் ஊடுருவி, நுழைந்து, ஆக்கிரமித்து, பாகிஸ்தானிலிருந்து அதைப் பிரித்து, வங்களாதேசத்தை உருவாக்கிய பிரதமர் இந்திரா காந்தியின் அதிரடி நடவடிக்கைக்குப் பின்னர் –

1974 மேயில் பிரதமர் இந்திரா காந்தியின் தலைமையிலும், 1998 மேயில் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலும் அதிரடியாக முன்னெடுக்கப்பட்ட – பொக்ரான் I மற்றும் பொக்ரான் II எனப் பெயரிடப்பட்ட அணுகுண்டு வெடிப்புச் சோதனைகளுக்குப் பின்னர் –

அதிக அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடிய சம்பவமாக காஷ்மீர் தொடர்பாக மோடி அரசு இப்போது எடுத்துள்ள இந்தத் தீடீர் நடவடிக்கையைக் கருதலாம்.

காஷ்மீர் தொடர்பான இந்த அதிர்வேட்டு நடவடிக்கை சுமார் எட்டு மணி நேரத்தில் ஒப்பேற்றி முடித்து விட்டமைதான் அதிகம் பேசப்படுகின்றது.

காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்தையும் அதன் நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு சிறப்புச் சலுகைகளையும் வழங்கிய இந்திய அரசியல் சாசனத்தின் 370 மற்றும் பிரிவு 35 ஏ சட்டப் பிரிவு ஆகியவற்றை ரத்துச் செய்வது பாரதீய ஜனதாக் கட்சியின் நீண்ட காலக் கொள்கையாக இருந்து வந்தது. அக்கட்சிக்கு அண்மையில் பெரு வெற்றியை ஈட்டித் தந்த நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி அக்கட்சி முன் வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில், மேற்படி சிறப்பு ஏற்பாட்டை ரத்துச் செய்வோம் என்ற அம்சமும் பிரதானமாக அடங்கியிருந்தது.

அந்த வகையில் பார்த்தால் தேர்தலில் தனது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை பாரதீய ஜனதாக் கட்சி அரசு குறுகிய காலத்தில் நிறைவேற்றியிருக்கின்றது.

ஜம்மு – காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்துச் செய்யும் வரலாற்றுப் பிரேரணை நேற்று முன்தினம் காலையில் இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும்

சமர்ப்பிக்கப்பட்டது. அது அறிமுகப்படுத்தப்பட்டு எட்டு மணித்தியாலங்களில் அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு விடயம் முடித்து வைக்கப்பட்டது.

வெளிப்படையாகப் பார்த்தால் விடயம் எட்டு மணி நேரத்தில் ஒப்பேறி விட்டது. எல்லாம் அதற்குள் முடிந்து விட்டது.

ஆனால், இதை ஒப்பேற்றுவதற்கான திரைமறைவு வேலைகள், ஆயத்தங்கள், நகர்வுகள் நீண்ட காலம் நடந்தன.

இப்போது விடயம் முடிந்து விடவில்லை. இந்த அதிரடி நடவடிக்கையின் விளைவுகள் – அதிர்வுகள் – மிக மோசமானவையாக நீண்ட காலம் தொடரலாம்.

இவ்விவகாரம் வெறும் இந்திய உள்நாட்டுப் பிரச்சினையாக அடங்கி விடப்போவதில்லை.

உள்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், நீதிமன்றம் மூலம் அரசின் இந்த நடவடிக்கையை இல்லா தொழிக்கச் செய்யும் சட்ட முயற்சிகள், அரசுக்கு எதிர்ப்பைக் காட்டும் வன்முறைகள் என்று பல விடயங்கள் கட்டவிழக் கூடும்.

அதேசமயம், ஐ.நா.மன்றம், இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் என்று பல தரப்பட்ட தளங்களில் இப்பிரச்சினை ஆக்ரோசமாக எதிரொலிக்கலாம்.

ஜம்மு – காஷ்மீர் விடயம் அப்பிராந்திய முஸ்லிம் மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்டது. அந்த மக்களின் செயற்போக்கில் பின் நின்று தூண்டி வரும் பாகிஸ்தானுட னும் தொடர்புபட்டது.

ஜம்மு – காஷ்மீரின் சிறப்புரிமையை ரத்துச் செய்தமை மூலம் அங்கு பெரும்பான்மையாகவுள்ள முஸ்லிம்களுக்கு தீங்கிழைக்கப்பட்டிருப்பதாக முஸ்லிம்களும் பாகிஸ்தானின் கூலிப் பட்டாளங்களும் கிளர்ந்தெழும் வாய்ப்பு உண்டு.

இந்தப் பிராந்தியத்தில், இந்துப் பிராமணர்கள் அதிகம் வாழும் ஜம்முவுக்கு யூனியன் பிரதேச அந்தஸ்தும், முஸ்லிம்கள் அதிகம் வாழும் பிரதேசத்துக்கு அதிலும் குறைந்த ஓர் அந்தஸ்து நிலையும் வழங்கப்பட்டிருப்பது நிச்சயம் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தும்.

இந்தப் பிராந்தியம் தனது சிறப்புரிமைகளையும், மாநில அந்தஸ்தையும் இழந்து விட்டமையால், இனிமேல் அதன் பாதுகாப்பு, ஒழுங்கு, உள்விவகாரங்கள் பிராந்திய நிர்வாகத் துக்கு உரியன்வாக இருக்கா. அவை நேரடியாக மத்திய அரசினால் வழிநடத்தப்படும் என்பது மோடி அரசுக்குச் சாதகமான விடயம்.

ஆப்கனில் தலிபான்களோடு ஒரு சமரசத்துக்கு அமெரிக்கா தயாராகி வருகின்றது. அப்படி ஆப்கனில் ஒரு சமரசத்தை ஏற்படுத்துவதற்கு அவ்விடயங்களில் வெளியில் இருந்து நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தி வரும் பாகிஸ்தானின் பங்களிப்பும் அவசியம். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அண்மையில் அமெரிக்கா சென்று தமது நட்புறவைச் சீர்செய்ய முயலும் இச்சமயத்தில் ஆப்கன் சமரசத்துக்காக பாகிஸ்தானுக்கு ஏதும் விட்டுக் கொடுப்பை – சகாயத்தை – சலுகையை – அமெரிக்கா வழங்கலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. அத்தகைய நிலை ஏற்பட முன்னர் காஷ்மீர் விவகாரத்துக்கு முடிவுகட்ட விரும்பிய மோடி அரசு, அதனால் அதனை அவசர அவசரமாக ஒப்பேற்றி முடித்திருக்கிறது. அவ்வளவே...!

# நல்லூர் கந்தன் மகோற்சவ காலத்தில் கலாசார உடை அணிவது கட்டாயம்

## தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், ஓக. 07

நல்லூர் ஆலயத் திருவிழா காலத்தில் தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலாசார உடைகளைப் பக்தர்கள் அனைவரும் அணிந்து வர வேண்டும் என்று தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்துகின்றது.

இது தொடர்பாக தமிழ் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினருமான எஸ்.நிஷாந்தன் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

வரலாற்றுப் பிரசித்தமிக்க நல்லூர்ப் பெருந் திருவிழா உற்சவம் தற்பொழுது ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழர்களின் கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் வழமை போன்று பாதுகாத்து எம் அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்க வேண்டிய தார்மீக பொறுப்பும் கடமையும் தமிழர்களாகிய எமக்கு மட்டுமே உண்டு என்பதை நாம் அனைவரும் புரிந்து கொண்டு முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும்.

திருவிழா உற்சவ நாள்களில் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் எமது தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஆடைகளை மட்டுமே அணிந்து வர வேண்டும் என தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்துகின்றது.

புலம்பெயர் தேசங்களில் இருந்து விடுமுறையை கழிப்பதற்காக தாயகம் திரும்பும் எம் உறவுகள் அதிலும் குறிப்பாக நல்லூர்க் கந்தனை தரிசிக்க குடும்பத்தோடு வரும் பக்த அடியார்கள் நல்லூர் ஆலயச் சுற்றாடலுக்கு வரும் போது கட்டாயமாக எமது தமிழ்க் கலாசார உடைகளை அணிந்து வரவேண்டும் என்று தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்திக் கொள்கின்றது.

நல்லூர் ஆலயச் சுற்றாடலுக்குள் பக்தர்களுக்கு இடையூறாகவும், அநாகரிகமாகவும், மதுபோதை மற்றும் துர்நடத்தை போன்ற செயற்பாடுகளில் யாரும் ஈடுபட முடியாது. இவ்வாறானவர்களை கண்காணித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையினர் தயாராக உள்ளார்கள் – என்றுள்ளது.

# பர்தா அணிந்து பரீட்சை எழுதத் தடை கிடையாது

பர்தா அணிந்து பரீட்சை எழுத எந்தத் தடையும் இல்லை என பரீட்சைகள் ஆணையாளர் தன்னிடம் தெரிவித்தார் என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குப் பர்தா அணிந்து சென்ற முஸ்லிம் மாணவிகளைப் பரீட்சை எழுத அனுமதி வழங்காமல் இடையூறு செய்யப்பட்டமை தொடர்பில், பரீட்சைகள் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோதே பரீட்சைகள் ஆணையாளர் இதனைத் தெரிவித்தார் என முஜீபுர் ரஹ்மான் மேலும் கூறினார்.

இது தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்களைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்குவதாக ஆணையாளர் தன்னிடம் உறுதியளித்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

க.பொ.த உயர் தரப்பரீட்சை நேற்று நாடுமுழுவதும் ஆரம்பமானது. இந்த நிலையில் பாடசாலைச் சீருடையில் (வெள்ளை நிற பர்தா) அணிந்து பரீட்சை எழுதச் சென்ற சில மாணவிகளுக்குப் பர்தாவை அகற்றிவிட்டு பரீட்சை எழுதுமாறு பணிக்கப்பட்டதாக சில பகுதிகளிலிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

குறிப்பாக பூகொடை குமாரிமுல்ல மாணவிகள் சிலர் பரீட்சை எழுதத் தயாரான நிலையில், பர்தாக்களை அகற்றுமாறு பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி கடுமையாக உத்தரவிட்டமையால் அந்த மாணவிகள் பர்தா இன்றி பரீட்சைக்குத் தோற்றினர்.

பின்னர் பெற்றோரினால் அவர்களுக்கு முக்காடுகள் வழங்கப்பட்டதாகவும் அறிய வருகிறது.

கிரிந்திவெல மத்திய கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளுக்கே, இந்நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் எம்.கே. ஆர்.மொஹமட் வலயக் கல்விப் பணிமனையிலும் கம்பஹா கல்விப் பணிப்பாளரிடமும் முறையிட்டுள்ளார்.

இதே போன்று வெலிமடையில் பரீட்சை எழுதிய மாணவிகளும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர் என அறிவிக்கப்படுகிறது. வெலிமடை தமிழ் வித்தியாலயத்தில் பரீட்சைக்குத் தோற்றச் சென்ற மாணவிகளே இவ்வாறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர் எனப் பெற்றோர் கூறியுள்ளனர். (ஐ)

# வைத்தியர் ஷாபியின் மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 07

குருநாகல் வைத்தியசாலையின் வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவைச் செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் தாக்கல் செய்த மனு மீதான வழக்கு விசாரணை, சிசிர டி ஆப்ரூ, பிரசன்ன ஜயவர்தன மற்றும் விஜித் மலல்கொட ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரரான வைத்தியர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, இந்த மனுவை திருத்தம் செய்வதற்காக ஒரு நாள் கால அவகாசம் வழங்குமாறு நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனடிப்படையில் அந்த மனுவை திருத்தம் செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதுடன் வழக்கு விசாரணையை 27 ஆம் திகதி வரை ஒத்திவைத்து நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது. (ஐ)

# எள்ளு, குரக்கன் இறக்குமதி நிறுத்தம்

கொழும்பு, ஓக. 07

எள்ளு, குரக்கன் போன்றவற்றின் இறக்குமதியை இந்த வருடத்திலிருந்து நிறுத்தப் போவதாக விவசாயத்துறை அமைச்சர், பி. ஹரிசன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் விவசாயத்துறைப் பணிப்பாளரிடம் எள்ளு இறக்குமதிக்காக நிறுவனம் ஒன்று அனுமதி கோரியிருந்தது. எனினும் அந்தக் காலப் பகுதிகளில் எள்ளு அறுவடை செய்யப்படும் என்பதால், உடனடியாக எள்ளு இறக்குமதியை நிறுத்தச் சொல்லித்தான் பணிப்பாளருக்கு உத்தரவிட்டார் எனவும் அமைச்சர் கூறினார். (ஐ)

**நாளை** 08.08.2019 வியாழக்கிழமை

நட்சத்திரம்: விசாகம் பி.இ 3.02 வரை
திதி : அட்டமி பி.ப 4.01 வரை
இராகுகாலம் : 1.34 – 3.04
சுப நேரம் : 7.34 – 9.04

# மஹிந்தவுடன் ஈரோஸ் இணையவே இல்லை!

## மறுக்கிறார் அதன் தலைவர்

மட்டக்களப்பு, ஓக. 07
எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தவுக்கு ஈரோஸ் கட்சி ஆதரவு வழங்கியதாகத் தெரிவிக்கப்படும் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லையென ஈரோஸ் கட்சியின் தலைவர் இரா.பிரபாகரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வன்னியில் உள்ள ஈரோஸைச் சேர்ந்த துஸ்யந்தன் என்பவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்தார் எனச் செய்திகள் வெளிவந்தன. ஈரோஸ் எந்தப் பேரினவாதக் கட்சிகளுடனும் இணையவில்லை, இணையப் போவதுமில்லை.

நாங்கள் யாரையும் ஆதரிப்பது என்றாலும் சில நிபந்தனைகளுடனேயே ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிப்போம். இணைந்த வடக்கு – கிழக்கு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு – கிழக்கில் குடும்பங்கள் தலைமை தாங்கும் பெண்களுக்கான வாழ்வாதார உதவிகள், மலையக தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா ஆகிய ஒப்பந்தங்களுக்கு எந்த ஜனாதிபதி வேட்பாளர் வருகின்றாறோ அவர்களுக்கு வடக்கு – கிழக்கு, மலையக தமிழர்கள் வாக்களிப்பார்கள்.

எழுந்தமானமாக கடந்த காலத்தில் வாக்களித்து ஏமாந்த நிலை இனியும் ஏற்படக்கூடாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் மகன் நாமல் தமிழ் மக்களுக்குள் வந்து தமிழ் கட்சிகளின் முகத்திரையைக் கிழிப்பேன் என்று கூறியிருக்கின்றார்.

முதலில் நாமல் ராஜபக்ஷவின் முகத்தில் உள்ள திரையைக் கிழியுங்கள். வன்னி யுத்தத்தின்போது காணாமல்போன இலட்சக்கணக்கானவர்கள் எங்கே?, அப்பாவித் தமிழ் இளைஞர்களைச் சிறையில் அடைத்த நீங்கள் அவர்களின் விடுதலைக்கு நடவடிக்கையெடுத்தீர்களா?

நீங்கள் ஓடிய வெள்ளை வானுக்கும் அதில் கடத்திய மக்களுக்கும் கணக்கு இல்லை, அவர்கள் எங்கே என்றும் இல்லை. நீங்கள் எங்களுக்கு முகத்திரையைக் கிழிக்க வரவேண்டாம். நாங்கள் உங்களது முகத்திரையைக் கிழிக்க முற்பட்டால் நீங்கள் தாங்க மாட்டீர்கள்.

எதிர்வரும் தேர்தல்களை முகம்கொடுப்பதற்கு அனைத்து தமிழ் கட்சிகளுடன் இணைந்து பயணிப்பதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். ஒரு பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு நாங்கள் தயாராகவிருக்கின்றோம். தமிழ் மக்களின் நன்மைக்காக ஈரோஸ் எதனையும் விட்டுக்கொடுப்பதற்கு தயாராகவுள்ளது.

எமது கட்சியின் பெயரை பாவித்து மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கியதாக தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# செபஸ்ரியார் சொரூபம் சேதம் நீர்கொழும்பில் பதற்ற நிலை!

கொழும்பு, ஓக. 07

நீர்கொழும்பு, கட்டுவப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள புனித செபஸ்ரியார் சொரூபம் இனந்தெரியாத நபர்களினால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தப் பிரதேசத்தில் பொதுமக்கள் நீதி கேட்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் அங்குப் பதற்றமான சூழ்நிலையொன்று உருவாகியுள்ளதாகவும், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை அடுத்து இந்தப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்களைத் தற்காலிகமாக உடனடியாக மூடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கட்டுவப்பிட்டிய பிரசேத்திலுள்ள புனித செபஸ்ரியார் தேவாலயத்தில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







# 4,286 கல்வியியல் டிப்ளோமாதாரிகளுக்கு அடுத்த மாதம் ஆசிரியர் நியமனம் கிட்டும்

கொழும்பு, ஓக. 07

4,286 தேசிய கல்வியியல் டிப்ளோமாதாரிகளுக்கு எதிர்வரும் மாதம் ஆசிரியர் நியமனம் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானோரைக் கொண்டு தேசிய பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புமாறு அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

நியமனம் வழங்குவதற்காக 9 மாகாணங்களிலும் உள்ள தேசியப் பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்கள் குறித்து கல்வி அமைச்சு அறிக்கையைப் பெற்றுள்ளது.

இந்த அறிக்கைகளுக்கு அமைய 3,748 வெற்றிடங்கள் நிலவுகின்றன. இந்த வெற்றிடங்களைப் பூர்த்தி செய்த பின்னர் எஞ்சியுள்ள டிப்ளோமாதாரிகளை மாகாணப் பாடசாலைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கல்வியியல் கல்லூரிகளில் டிப்ளோமா பாடநெறியைக் பயில்வதற்காக இம்முறை 8 ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனக் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வியியல் பீடப் பிரிவு அறிவித்துள்ளது.

கல்வியியல் கல்லூரிகள் மட்டத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் ஒவ்வொரு கல்லூரிக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய பயிலுநர்களின் எண்ணிக்கை எதிர்வரும் 16 ஆம் திகதி தீர்மானிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 20 ஆம் திகதி அந்தப் பெயர்ப் பட்டியல் பதிவு செய்வதற்காக கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். அடுத்த மாத நடுப்பகுதியளவில் இந்தப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வது இதன் நோக்கமாகும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# 2649 சாரதிகளுக்கு எதிராக வவுனியாவில் நடவடிக்கை!

வவுனியா, ஓக. 07

கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை வவுனியா போக்குவரத்துப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கை மூலம் 2649 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் விசேட நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்ய கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் போக்குவரத்துப் பொலிஸாரால் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியாவில் பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரம மேற்பார்வையில் கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான 27 நாட்கள் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கைகளில் 2649 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 65 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தச் சாரதிகள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன், அவர்களது சாரதி அனுமதிப் பத்திரங்களும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான பிரச்சினை, வாகன ஆவணங்கள் இல்லாமை, வாகன இருக்கைப் பட்டி அணியாமை, தலைக்கவசம் அணியாமை, வீதி விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தியமை, விபத்துக்களை ஏற்படுத்தியமை என்பன தொடர்பில் 2584 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களிடம் இருந்து நீதிமன்றம் மற்றும் தபால் நிலையம் ஊடாக குற்றப் பணங்களும் அறவிடப்பட்டுள்ளன – என்றனர். (ஐ – 100)

'ஒரு பொம்மையின் வீடு'

# நாடக ஆற்றுகையின் திரை வடிவம் நாளை

யாழ்ப்பாணம், ஓக.07

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை வெறுவெளி அரங்கக் குழுவின் 'ஒரு பொம்மையின் வீடு' நாடக ஆற்றுகையின் திரை வடிவ காணொலிக் காட்சியும் கலந்துரையாடலும் –

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

தயாரிப்பு – ரொரன்ரோ மனவெளி கலையாற்றுக் குழு. மொழிபெயர்ப்பு, நெறியாள்கை விக்னேஸ்வரன்.

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.07

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் –

இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.15 மணி வரை திருமுறை அரங்கு இடம்பெறும்.

பாட்டு – கே.எஸ். ஆர்.திருஞானசம்பந்தன், உடன்பாடுபவர் – க.சித்திரா, வயலின் – அ.ஜெயராமன், ஹார்மோனியம் – ந.செல்வச்சந்திரன், மிருதங்கம் – சதா வேல்மாறன், தடம் – அ.செல்வரட்ணம், கெஞ்சிரா – வி.சிவமூர்த்தி. (இ

# ஹேஷா விதானகேயை பார்வையிட வைத்தியசாலை சென்ற ரணில், ரவி!

கொழும்பு, ஓக. 07

ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தொண்டைப் பகுதியில் அறுவைச் சிகிச்சையொன்றுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லங்கா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஹேஷா விதானகேயை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் ரவி கருணநாயக்க ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.



# வரலட்சுமி விரத சிறப்பு பூசை

தெல்லிப்பழை,ஓக.07

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வரலட்சுமி விரத சிறப்புப் பூசை வழிபாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அடியவர்கள் பலரும் வரலட்சுமி விரதத்தை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் அனுஷ்டிப்பது வழக்கமாகும். (இ

# சிறப்பு அந்தஸ்தை இழந்தது காஷ்மீர்

**புதுடில்லி,ஓக.07**
**காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370 ஆவது அரசியல் சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டுள்ளது. அந்த மாநிலம் இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதனால், 72 ஆண்டு காலக் காத்திருப்புக்கு பிறகு, காஷ்மீரை புதிய வடிவத்தில் நாடு காணப்போகிறது.**



மோடி அரசு, காஷ்மீருக்கு கூடுதல் படைகளை அனுப்பியது. அமர்நாத் யாத்திரை மேற்கொண்டிருந்த பக்தர்களை உடனடியாக வெளியேறுமாறு கேட்டுக்கொண்டது. இது எதற்காக என்ற 'சஸ்பென்ஸ்', மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, நாடாளுமன்றத்தில் காஷ்மீர் பற்றிய அறிவிப்பை வெளியிட்ட பிறகு நீங்கியது.

காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படுவதை ஆதரிப்பவர்கள், இது ஒரே நாடு, ஒரே அரசியல் சட்டம், ஒரே சட்டம் என்ற வரிசையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று நம்புகிறார்கள். இந்தச் சிறப்பு அந்தஸ்து காரணமாக, நாட்டின் பிற பகுதி மக்களுக்கு கிடைத்து வரும் வளர்ச்சியின் பலன்கள், காஷ்மீர் மக்களுக்கு மட்டும் கிடைக்கவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள்.

370 மற்றும் 35ஏ பிரிவுகளை நீக்குவோம் என்று பாரதீய ஜனதா தனது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது. இந்த வாக்குறுதிகள், நீண்ட காலமாகவே அக்கட்சியின் நிலைப்பாடாக இருக்கின்றன. மேலும், 370 ஆவது பிரிவு, காஷ்மீரின் பொருளாதாரத்தில் எதிர்மறை தாக்கத்தை உண்டாக்கி, சாதாரண மக்களின் வாழ்க்கையை மோசமாக்கி விட்டதாக பா.ஜனதா தலைவர்கள் கருதுகிறார்கள்.

மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், 370 ஆவது பிரிவு காரணமாக, இன்று எந்த முதலீடும் காஷ்மீருக்கு வருவதில்லை. ஹோட்டல்கள் உள்ளிட்ட கட்டமைப்பு திட்டங்களில் யாரும் முதலீடு செய்ய விரும்புவது இல்லை என்று சொல்கிறார்.

ஆனால், இந்த நடவடிக்கை, நாட்டின் கூட்டாட்சி முறையில் தலையிடும் செயல் என்றும், அரசியல் சட்ட பிரிவுகளை தன்னிச்சையாக பயன்படுத்துவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இந்த முடிவு, காஷ்மீர் மக்களை மேலும் தனிமைப்படுத்த வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஆனால், நிர்மலா சீதாராமன், எதிர்க்கட்சிகளின் அச்சத்தை நிராகரித்தார். நாடு 70 ஆண்டுகளுக்கு மேலாக காத்துக்கொண்டிருக்கிறது. காஷ்மீர் மாநிலம், இந்தியாவுடன் ஒருங்கிணைய இது வழி வகுக்கும். ஜனசங்க காலத்திலும், பின்னர் பா.ஜனதாவாக மாறிய பிறகும் இதுதான் எங்கள் உறுதிப்பாடாக இருந்து வருகிறது. மேலும், இது தான் எங்கள் தேர்தல் செயல் திட்டம். 2019 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் முக்கிய இடம் பிடித்துள்ளது என்று அவர் கூறினார்.

(உ)

## காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து; ரத்துச் செய்தார் ஜனாதிபதி!

புதுடில்லி,ஓக.07

காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டு இருந்த சிறப்பு அந்தஸ்தை இந்திய ஜனாதிபதி நேற்று முன்தினம் ரத்துச்செய்து உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து, அந்த மா நிலத்தை இரண்டாக பிரிக்க வகை செய்யும் பிரேரணையை மத்திய அரசு மாநிலங்களவையில் தாக்கல் செய்து நிறைவேற்றியது.

இந்தியாவின் வட கோடியில் இமயமலை பகுதியில் அமைந்துள்ள எழில் மிகுந்த மாநிலம் காஷ்மீர். இந்த மாநிலம் ஜம்மு, காஷ்மீர், லடாக் ஆகிய 3 பகுதிகளைக் கொண்டது.

நாடு ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் அடைந்த பிறகு காஷ்மீர் மாநிலம் இந்தியாவுடன் இணைந்தது. ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த போது காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் வகையில் அரசியல் சாசனத்தில் 370, 35ஏ ஆகிய பிரிவுகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன.

காஷ்மீருக்கு வழங்கப்பட்ட இந்தச் சிறப்பு அந்தஸ்தின் காரணமாக வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு சொத்து வாங்கவோ, தொழில் தொடங்கவோ முடியாது. காஷ்மீர் மாநில பெண்கள் வெளி மாநிலங்களைச் சேர்ந்த ஆண்களைத் திருமணம் செய்தால் அவர்களுடைய சொத்துரிமை பறிபோய் விடும்.

இராணுவம், வெளியுறவு, தகவல் தொடர்பு தவிர மற்ற துறைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் காஷ்மீருக்கு பொருந்தாது. அந்த மாநில சட்டசபையின் பதவிக் காலமும் 6 ஆண்டுகள் ஆகும். அந்த மாநிலத்துக்கென்று தனி அரசியல் சட்டமும், தனிக் கொடியும் உண்டு.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது, தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படும் என்று பாரதீய ஜனதா வாக்குறுதி அளித்தது. தேர்தலில் அந்த கட்சி மகத்தான வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்ததைத் தொடர்ந்து, அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடங்கியது.

மாநிலங்கள் அவையில் எதிரணியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இது தொடர்பான சட்டப் பிரேரணையை பாரதீய ஜனதா அரசு நேற்று முன்தினம் நிறைவேற்றியது.

## இந்தியாவின் நடவடிக்கைக்கு பாக். கண்டனம் நாடாளுமன்றை அவசரமாகக் கூட்டி ஆராய்வு!

### ஐ.நா., இஸ்லாமியக் கூட்டமைப்பு போன்றவற்றிடம் முறையிட முடிவு

இஸ்லாமாபாத்,ஓக.07

காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது மற்றும் அந்த மாநிலம் யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்படும் நடவடிக்கைகளை நிராகரித்துள்ள பாகிஸ்தான், இது தொடர்பாக விவாதிக்க நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தை அவசரமாகநடத்தியது.

இந்திய அரசின் நடவடிக்கைகளை நிராகரித்துள்ள பாகிஸ்தான், இதற்குக் கண்டனமும் தெரிவித்து உள்ளது. இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

காஷ்மீர் பிராந்தியம், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய பகுதியாகும். அங்கு இந்திய அரசு மேற்கொள்ளும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் எதுவும் அதன் சர்ச்சைக்குரிய அந்தஸ்தில் மாற்றம் ஏற்படுத்தாது. அத்துடன் இதை காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் மக்கள் ஒருபோதும் ஏற்கவும் மாட்டார்கள்.

காஷ்மீர் விவகாரத்தில் இந்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்புகளை பாகிஸ்தான் வன்மையாக எதிர்ப்பதுடன், அதை நிராகரிக்கவும் செய்கிறது. இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஐ.நா.விடம் முறையிடுதல் உள்ளிட்ட அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகளையும் பாகிஸ்தான் மேற்கொள்ளும்.



– இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ஷா மக்மூத் குரேஷி கூறும்போது, 'காஷ்மீரை சர்ச்சைக்குரிய பிரதேசமாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் ஏற்றுக்கொண்டு உள்ளது. இது தொடர்பாக பல்வேறு தீர்மானங்களையும் அது நிறைவேற்றி உள்ளது. காஷ்மீரை சர்ச்சைக்குரிய பகுதியாக முன்னாள் இந்திய பிரதமர் வாஜ்பாயும் ஏற்றுக்கொண்டு இருந்தார்' என்று தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் ஐ.நா., இஸ்லாமிய கூட்டமைப்பு, நட்பு நாடுகள் மற்றும் மனித உரிமை ஆணையங்களிடம் கோரிக்கையும், முறையீடும் செய்யப்போவதாக கூறிய குரேஷி, இது தொடர்பாக தங்கள் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்த இருக்கிறார்கள் எனவும் கூறினார். எப்போதும் போல காஷ்மீர் மக்களுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிக்கும் எனவும், இந்தியாவின் முடிவு தவறானது என வரலாறு நிரூபிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இந்திய எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு, கண்டனம்

புதுடில்லி,ஓக.07

காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட நாள் இந்திய அரசியல் சாசன வரலாற்றில் ஒரு கறுப்பு தினம் என்று ப.சிதம்பரம் கூறினார்.

மத்திய அரசு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370 ஆவது சட்டப்பிரிவை ரத்து செய்தது. இதுபற்றி பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

முன்னாள் நிதி மந்திரி ப.சிதம்பரம் நாடாளுமன்றத்துக்கு வெளியே நிருபர்களிடம் கூறும்போது, ஏதோ துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடக்கப்போகிறது என எதிர்பார்த்தோம். ஆனால் ஒரு கெட்ட கனவு போல இப்படி ஒரு பேரழிவான நடவடிக்கையை எடுப்பார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. இந்திய அரசியல் சாசன வரலாற்றில் இந்த நாள் ஒரு கறுப்பு தினம் என்றார்.

மூத்த காங்கிரஸ் தலைவர் குலாம்நபி ஆசாத் கூறும்போது, பா.ஜனதா வாக்குகளுக்காக இந்த முடிவை எடுத்துள்ளது. காஷ்மீர் மாநிலத்தின் ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பில் அக்கட்சி விளையாடி இருக்கிறது என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, மத்திய அரசு செய்துள்ளது ஒரு பின்னடைவான காரியம். இது காஷ்மீர் மாநில மக்களை மேலும் தனிமைப்படுத்திவிடும். மக்களின் கவனத்தை திசைதிருப்பி, தேசியவாதம் என்ற பெயரில் நாட்டில் ஒரு பீதியை ஏற்படுத்தி உள்ளது. ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டில் உள்ள இந்த அரசு காஷ் மீர் மாநிலத்தை துண்டு, துண்டாகப் பிரிக்க நினைக்கிறது என்றார்.

இது இந்திய அரசியல்சாசனத்தின் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல். ஆர்.எஸ்.எஸ். – பா.ஜனதா ஆட்சியாளர்கள் நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் கூட்டாட்சி தத்துவம் ஆகியவற்றை சகித்துக்கொள்ள மறுக்கிறார்கள்.

அவர்கள் காஷ்மீர் மாநிலத்தை ஆக்கிரமிப்பு பகுதியாக கருதுகிறார்கள். மத்திய அரசின் இந்த முடிவை எதிர்த்து இடதுசாரி கட்சிகள் இணைந்து இன்று (புதன்கிழமை) நாடு தழுவிய போராட்டம் நடத்தும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. டெரிக் ஓபிரெய்ன் கூறும்போது, இன்று நடைபெற்றுள்ள இந்த அரசியல்சாசன ஒழுக்கக்கேடு மற்றும் கொடூரமான நடைமுறையை திரிணாமுல் காங்கிரஸ் எதிர்க்கிறது என்றார்

மேலும் தி.மு.க., ராஷ்டிரீய ஜனதாதளம் ஆகிய கட்சிகளும் இந்த முடிவை எதிர்த்துள்ளன. பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியான ஐக்கிய ஜனதாதளம் இந்த முடிவை எதிர்த்துள்ளது. அக்கட்சியின் தலைவர் ராம்நாத் தாக்கூர் விவாதத்தின்போது, மோடி அரசின் இந்த நடவடிக்கையை நாங்கள் எதிர்க்கிறோம் என்றார்.

அதேசமயம் பகுஜன் சமாஜ் கட்சி, அ.தி.மு.க., பிஜு ஜனதாதளம், சிவசேனா, வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி ஆகியவை வரவேற்றுள்ளன.

(உ)

# ஹொங்கொங்கில் 5 லட்சம் பேர் வீதிக்கு இறங்கிப் போராட்டம்!



ஹொங்கொங் நாடாளுமன்றம் அமைந்துள்ள சாலையை போராட்டக்காரர்கள் ஆக்கிரமித்து இருக்கின்றமையைப் படத்தில் காணலாம்.

## போக்குவரத்துச் சேவைகள் முடங்கின

ஹொங்கொங்கில் 5 லட்சம் பேர் பங்கேற்ற போராட்டத்தால் விமான சேவை முடங்கியது. 230 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

ஹொங்கொங் சீனாவுக்குக் கீழ் இயங்கி வரும் நிலையில் ஹொங்கொங்கில் கிரிமினல் வழக்குகளில் சிக்குகிறவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையை சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டு வர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.

ஆனால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த ஜுன் மாதம் ஜனநாயக ஆதர வாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். லட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி நடத்திய போராட்டத்தால் ஹொங்கொங் குலுங்கியது.

ஆரம்பத்தில் தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்த ஹொங்கொங் நிர்வாகம் மக்களின் தொடர் போராட்டத்துக்கு அடி பணிந்தது. கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்தப் பிரேரணை நிறுத்தி வைக்கப்படுவதாக ஹொங்கொங் நிர்வாக தலைவர் கேரி லாம் அறிவித்தார்.



ஆனாலும் போராட்டக்காரர்கள் சமரசம் ஆகவில்லை. பிரேரணையை முழுமையாக திரும்பப்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக வார இறுதி நாள்களில் லட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் பேரணி நடத்தியும், அரசு அலுவலகங்கள் மற்றும் பஸ், பொலிஸ் நிலையங்களை முற்றுகையிட்டும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டங்களின் போது பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே வன்முறை வெடித்து வருகிறது. ஆனாலும் போராட்டம் தொடர்ந்து தீவிரம் அடைந்து வருகிறது.

வார இறுதிநாள்களில் மட்டும் நடந்து வந்த போராட்டங்கள் தற்போது வார நாள்களிலும் நடக்கத் தொடங்கி இருக்கின்றன. அந்த வகையில் நேற்று முன்தினம் அதிகாலை முதலே மக்கள் வீதிகளில் பேரணியாகச் சென்றும், சாலைகளை முற்றுகையிட்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சாலை போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டது. அதேபோல் போராட்டக்காரர்கள் ரயில் நிலையங்களுக்குள் புகுந்து ரயில்களை மறித்தும் போராட்டம் நடத்தினர்.

அத்துடன் விமான நிலையங்களுக்கு செல்லும் முக்கிய சாலைகளைப் போராட்டக்காரர்கள் ஆக்கிரமித்தனர். இதனால் விமான நிலையங்களில் பணிகள் பாதிக்கப்பட்டு விமான சேவை முடங்கியது. 230 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

போராட்டம் காரணமாக சாலை, ரயில், விமானம் என அனைத்து வகையான போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டமையால் ஹொங்கொங்கில் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

நேற்று முன்தினம் போராட்டத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பஸ் சாரதிகள் எனப் பல தரப்பினர் கை கோர்த்தனர் எனவும், ஒட்டுமொத்தமாக சுமார் 5 லட்சம் பேர் போராட்டத்தில் பங்கேற்றனர் எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் இந்தப் போராட்டம் ஹொங்கொங் நிர்வாகத்துக்கு மிகுந்த தலைவலியாக அமைந்தது. போராட்டக்காரர்கள் ஹொங்கொங்கின் நிலைமையை அபாயகரமான நிலைக்கு கொண்டு செல்கின்றனர் எனக் கூறி தலைவர் கேரி லாம் அதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தார்.

# கருக்கலைப்புக்கான தடை; நீக்குகின்றது நியூஸிலாந்து!



வெலிங்டன், ஓக.07

நியூஸிலாந்தில் கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கும் பிரேரண அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

நியூஸிலாந்து நாட்டில் பெண்கள் கருக்கலைப்பு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும் கர்ப்பம் தரித்ததால் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு உடல் ரீதியிலோ அல்லது மன ரீதியிலோ ஆபத்து இருக்கும் பட்சத்தில் அவர் கருக்கலைப்பு செய்துகொள்ளலாம். அதுவும் அந்த பெண்ணை 2 மருத்துவர்கள் பரிசோதித்து அவர்கள் அனுமதி வழங்கினால் மட்டுமே கருக்கலைப்புச் செய்ய முடியும்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் இருக்கும் இந்தக் கடுமையான சட்டத்தை நீக்க வேண்டும் எனவும், கருக்கலைப்பு தண்டனைக்குரிய குற்றமாகாது என்பதை அறிவிக்க வலியுறுத்தியும் சமூக ஆர்வலர்கள் மற்றும் பெண்ணியவாதிகள் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

இந்த நிலையில் கருக்கலைப்பை சட்டபூர்வமாக்கும் பிரேரண அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. இந்தச் சட்டம் நிறைவேறும் பட்சத்தில் பெண்கள் கர்ப்பம் தரித்த 20 வாரங்களுக்குள் மருத்துவரின் உதவியோடு கருக்கலைப்பு செய்துகொள்ளலாம். இதற்காக அவர்கள் எந்த சட்ட வழிமுறைகளையும் பின்பற்ற தேவையில்லை. இதுகுறித்து அந்நாட்டின் நீதித்துறை மந்திரி ஆன்ட்ரூ லிட்டில் கூறுகையில்; உடல் மற்றும் மனம் சார்ந்த பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பான கருக்கலைப்பு அவசியமாகிறது. ஒரு பெண்ணுக்கு தனது உடலில் என்ன நடக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமை இருக்கிறது – எனக் கூறினார்.

# போக்குவரத்து நெரிசலில் இருந்து தப்பிக்க பறக்கும் கார்கள் 2030 இல் புழக்கத்துக்கு!

ஜப்பானின் என்.இ.சி. நிறுவனம் தயாரித்துள்ள பறக்கும் கார்கள் வரும் 2030ஆம் ஆண்டில் சந்தைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாளுக்கு நாள் பெருகி வரும் வாகனங்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது அதிகரித்து வருகிறது. இதற்குத் தீர்வு காணும் பொருட்டு ஜப்பானின் பிரபல நிறுவனமான என்.இ.சி. ஓட்டோமொபைல் நிறுவனம் பறக்கும் காரைத் தயாரித்து அதனை வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தது.




4 புறொப்பல்லர்களுடன் கட்டியமைக்கப்பட்டுள்ள இந்த வாகனம் 4 பேர் பயணிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. நின்ற நிலையிலும் ஓடுதளத்திலும் இந்த வாகனத்தை இயக்க முடியும்.

முழு அளவிலான சோதனை ஓட்டங்களை முடித்த பின்னர் வரும் 2030 ஆம் ஆண்டு இது பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என என்.இ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சிரியாவில் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள் காட்சிக்கு!



சிரியாவில், தீவிரவாத குழுக்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட துப்பாக்கிகள், வெடிபொருள்களை சிரிய இராணுவம் காட்சிக்கு வைத்துள்ளது.

சிரியாவில் அரசுக்கு எதிராக கிளர்ச்சி குழுக்கள், தீவிரவாத குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவம் நடத்திய தாக்குதல்களின்போது துப்பாக்கிகள், வெடிபொருள்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட அதிநவீன துப்பாக்கிகள், 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ரவைகள், வெடிபொருள்கள், இராணுவ வாகனங்களைக் குறிவைத்து தாக்கும் ஆயுதங்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

சிரியாவுக்கு எதிராக செயல்படும் நாடுகளில் இருந்து கிளர்ச்சி குழுக்கள் வாங்கிய இந்த ஆயுதங்களை இராணுவத்துக்குப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளோம் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.




# நல்லூர் உற்சவகால பொருளாதார வளர்ச்சி

உலகில் ஒவ்வொரு நாடும் தனது பொருளாதார மற்றும் நாட்டு மக்களின் நன்மைகளினை கருத்திற்கொண்டு பல்வேறு செயற்பாடுகளினை தொடர்தேர்ச்சியாக செய்துவருவதனை நாம் பார்த்து வருகின்றோம். உதாரணமாக, உலகக் கோப்பை Cricket, Foot Ball, Olympics போன்ற பெரிய அளவிலான நிகழ்வினை ஒவ்வொரு நாடும் தனது நாட்டினில் நடத்துவதற்கு போட்டி போட்டுக் கொன்று முன்வருவதனை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அதற்கு மிகமுக்கியக் காரணமாக இருப்பது அவ்வாறு நடத்தும் எந்தவொரு நாட்டிக்கும் ஏற்படும் நேரடியான மற்றும் மறைமுகமான பல்வேறு பொருளாதார நன்மைகள் சொல்லிலடங்கா. அதேபோல ஒரு சந்தர்ப்பத்தினை ஒவ்வொரு வருடமும் எமது சிறிய மற்றும் அழகிய இலங்கை நாட்டிற்கும் மக்களுக்கும் கடவுளாகவே அருள்பாலித்து கொடுத்திருக்கும் ஓர் சிறந்த வாய்ப்பே நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா ஆகும். இதுவே முதலிடத்தினை பெறுகின்றது.

நாம் ஒவொருவரும் கடந்த பல தசாப்தங்களாக ஏதோஒருவகையில் பல்வேறுபட்ட துன்பங்களினை அனுபவித்துவந்தே உள்ளோம். அப்படிப்பட்ட எங்கலெல்லோரையும் தட்டிகொடுப்பதற்காகவே இந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா அமைகின்றது. இப்படிப்பட்ட ஒரு மிகச்சிறந்த அருமையான சந்தர்ப்பத்தினை நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அதன் வாயிலாக பால்வேறுபட்ட நன்மைகளினை நாம் நிச்சயமாக பெற்றுக்கொள்ளமுடியும்.

நல்லூர் கந்தனுக்கு திருவிழா நடைபெறும் போது நாம் இவ்வாறு அதனை ஒரு சிறந்த திருவிழாவாக எமக்கு அமைத்துக்கொள்ளமுடியும் என்பதனை இப்போது பார்ப்போம்.

நல்லூர் கந்தனுக்கு திருவிழாவானது தொடர்ச்சியாக 25 நாட்கள் நடைபெறுகின்றன, இதற்கு முன்னும் பின்னுமாக 10 நாள்கள் சேர்த்துகொண்டோமாயின் 45 நாள் கள் அடங்கலாக 11/2 மாதம் வருகின்றது. இந்த கால அளவானது மிகவும் முக்கியமான, பயன்பாடான, அனுகூலமான காலமாக அமைகின்றது.

இந்த நல்லூர் கந்தன் திருவிழா நிகழும் காலமானது மிகவும் சிறந்த மற்றும் எல்லோரும் பங்குபெறக்கூடிய சிறந்த காலமாக அமைகின்றது. ஏனெனில் ஓகஸ்ட் 2ம் தவணைக்கான பாடசாலை விடுமுறை காலமாகவும், தரம் 5 மற்றும் (க.பொ.த). உயர்தர பரீட்சை முடிவடைத்து மாணவர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களும் சந்தோஷமாக வெளிவரும் ஒரு சிறந்தம் இது.

அதுமட்டுமல்லாது நல்லூர் கந்தன் திருவிழா நடைபெறும் காலங்களில் சிறந்த காலநிலையும் அந்த கந்தன் அருளால் அமைந்து விடுகின்றது. அதிக வெயிலோ மழையோ இல்லாமல், மக்களின் இயல்பு வாழ்விற்கு ஏற்றதாக அமையும் ஒரு சிறந்த காலமாக இருப்பதனையும் நாம் காலாகாலம் கவனித்துள்ளோம்.

நல்லூர் கந்தன் திருவிழா நடைபெறுவதற்கு முன்னைய மற்றும் பின்னைய காலத்தினை ஒட்டியே ஏனைய பல கோவில்களின் திருவிழாக்களும் வருகின்றன. உதாரணமாக நயினை நாகபூஷணி அம்மன் திருவிழா, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய திருவிழா மற்றும் சந்நிதி முருகன் ஆலய திருவிழா, வல்லிபுர ஆழ்வார் கோவில் திருவிழா என்று கூறிக்கொண்டே போகலாம்.

நல்லூர் கந்தன் திருவிழா நடைபெறும் இதே காலத்தில் பல வெளிநாடுகளில் பாடசாலை விடுமுறை காலமாகவும், காலநிலை காரணமாக அங்கு வசிக்கும் நம்மவர்களும் மற்றும் அந்நிய நாட்டு பிரஜைகளும் வரக்கூடிய காலமாகவும் அமைந் துள்ளது. இது ஒரு மிகச்சிறந்த சந்தர்ப்பமாகும். ஏனெனில் புதிய வெளிமாவட்ட, வெளிநாட்டு வரவுகள் மிகவும் முக்கியமாக இருப்பதேயாகும். மற்றும் இந்த காலங்களில் இலங்கையில் Off Season ஆக இருப்பதுடன், இலங்கை வந்து செல்லக்கூடிய விமானக்கட்டணகளும் மலிவாகக் காணப்படுவதும் (Air fares are comparably Cheap) நல்லதொரு வரப்பிரசாதமாக இருக்கின்றது.

கலை – கலாசாரம் – விழுமியம் வெளிகொண்டு வரும் மற்றும் பயிலும் நிகழ்வாக அமைகின்றது. நல்லூர் கந்தன் திருவிழா போன்ற பிரம்மாண்டமான தமிழ் மற்றும் சைவ நிகழ்வுகள் வாயிலாக தமிழ் கலை – கலாசாரம் – விழுமியம் போன்ற எமது பண்பாட்டு வாழ்வுமுறைகளினை எமது வருங்கால சந்ததியினர்களிற்கும், ஏனைய உலக நாடுகளுக்கும் தெரியப்படுத்தும் ஒரு மிகச்சிறந்த நிகழ்வாகவே தெய்வாதீனமாக அமைகின்றது.–

மேற்கூறிய சாதக நிலையினை இலங்கை நாடும் நாட்டு மக்களும் நல்லமுறையினில் பயன்படுத்து வோமாயின் எண்ணிலடங்கா நன்மைகளினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். உதாரணத் திற்கு – வியாபாரம் செய்கின்றவர்களுக்கு நல்ல சந்தைவாய்ப்பு, புதிய கேள்வி (Demand/ New Orders), புதிய சந்தை (New Opportunity) போன்ற நேரடி நன்மைகளினை பெற்றுக்கொள்ளமுடி யும். புதிய தொழில் தொடங்குநர்களுக்கு சிறந்த சந்தைவாய்ப்பாகவும் ஏற்கனவே தொழில் செய்கின்றவர்களுக்கு தொழில் வளர்ச்சிக்கும் பேருதவியாக அமையும்.

அத்துடன் Hotel மற்றும் Stay Home போன்ற துறையினருக்கு நல்ல போக்கினை (Seasonal Demand) பெற்றுக்கொள்ள முடியும். பண்ட வியாபாரத்திற்கு மட்டுமல்லாது சேவை வழங்கும் நிறுவனங்களும் நல்ல பலனைப் பெற்றுக்கொள்ள முடியும், உதாரணமாக வைத்தியத்துறை, உணவு, சுகாதாரம், நிர்மாணத்துறை (கடை , பந்தல் சேவை).– போக்குவரத்து (Vehicle Services & Hiring Business) போன்றவை அவற்றில் சிலவாகும். அதுமட்டுமல்லாது உள்ளூர் உற்பத்திகளுக்கு நல்ல சந்தைவாய்ப்பு ஏற்படுகின்றன. உதாரணமாக பனை உற்பத்தி பொருள்கள், உள்ளூர் விவசாயப் பொருள்கள் போன்றவற்றினை குறிப்பிடலாம்.

இவ்வாறானதொரு சாதகமான நிலை, முழு இலங்கை வியாபாரத்திற்கும் ஏதோவொருவகையில் அனுகூலமாகவே இருப்பதனால் இந்த அரிய வாய்ப்பினை நாம் அனைவரும் நிச்சயமாக பார்வையாளராக இல்லது பங்காளியாக செயற்படுவதன் வாயிலாக எமது தனிப்பட்ட வளர்ச்சியுடன், எமது ஒவ்வொருவரினதும் ஊர், மாவட்டம், மாகாணமாக முழு நாட்டினையுமே சிறந்ததொரு வெற்றிப்பாதையினை நோக்கி கொண்டுசெல்லக்கூடியதாக ஒரு சிறந்த வாய்ப்பாக நல்லூர் கந்தன் திருவிழா அமைகின்றது.

### நாம் செய்ய வேண்டியவை.....

எம்மை உடல், உள ரீதியாக தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

போதிய நிதி நிலைமையினை துல்லியமாக கணிப்பிட்டு தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளும் நிலையினை உருவாக்கிக்கொள்ளல் வேண்டும்.

தேவையான மனிதவலு (Human Resources) இருக்கக்கூடியதாக பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

எதிர்பாராத நிகழ்வுகளினை (Unexpected Events) முகம்கொடுக்கும் சாமர்த்தியத்தினை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஏனைய காலகட்டங்களில் அதிகமாக கிடைக்கக்கூடிய பொருள்களினை சேமித்து அதிலிருந்து பயன்பெற்றுக்கொள்ளும் செயற்றிட்டத்தினை முறையாக அமுல்படுத்தவேண்டும்.

எக்காரணம் கொண்டும் பொருள்களினதும் சேவைகளினதும் தரம் குறையாவண்ணம் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

பயன்படுத்தாமல் இருக்கும் நிலங்களை இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் குறிகியகால குத்தகைக்கு அல்லது வாடகைக்கு கொடுத்து மேலதிக வருமானத்தினை பெற்றுக்கொள்ளமுடியும்.

## அனைவரும் பயன்பெற வழிவகை உண்டு

தொழிலின்றி இருப்போர் தமக்கு முடியுமானதும் தெரிந்ததுமான முயற்சியில் ஈடுபடக்கூடிய பல்வேறு சந்தர்ப்பத்தினை பெறக்கொடியதாக இருக்கும். எனவே இந்த மாதிரியான அரிய வாய்ப்பினை நழுவவிடக்கூடாது.

அன்றாடம் வேலைசெய்யும் நேரம் தவிர்ந்து மிகுதியாக நேரமிருப்பின் அதனை பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

மக்கள் சேவையே மகேஸ்வரரின் சேவை என்கின்ற வாக்கிற்கிணங்க சேவை செய்ய விரும்புவோர்கள் லட்சோபலட்சம் கலந்து சிறப்பிக்கின்ற இவ்வாறானதொரு புனித தருணத் தில் இலவசமாக தம்மால் முடிந்த சேவையினை வழங்கி மற்ற மனிதர்களுக்கு முன்னுதாரணமாக திகழ முடியும்.

எனவே சந்தர்பங்களை நல்லமுறையிலும் எமக்கு சாதகமான முறையிலும் பயன்படுத்துவதன் மூலமாக இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் தனிநபர் வருமானத்தினை உயர்த்தமுடிவதுடன் முழு இலங்கை நாட்டினையும் சிறந்த தன்நிறைவு பெற்ற செல்வந்த நாடாக வளர்ச்சிபெற நல்லூர் கந்தன் திருவிழா ஒரு சிறந்த வாய்ப்பாக இருப்பதனால் நீங்கள் எல்லோரும் பயன்பெற முடியும்.

**எஸ்.சுவாமிநாதன் சர்மா**
**கொழும்பு**

# ஊடகவியலாளர் நிபோஜனிடம் ரி.ஐ.டி. 3 மணிநேரம் விசாரணை

கிளிநொச்சி, ஓக. 07

கிளிநொச்சி ஊடகவியலாளர் எஸ்.என். நிபோஜனிடம் கொழுபில் நேற்றுப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்ற சந்தேகத்தில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தேடப்படும் ஒருவர் புலம்பெயர் நாடு ஒன்றிலிருந்து தொலைபேசி மூலம் அழைப்பை மேற்கொண்டு ஊடகவியலாளர் நிபோஜனிடம் உரையாடியமை தொடர்பிலேயே அவரிடம் மூன்று மணிநேரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் எஸ்.என்.நிபோஜன் பயன்படுத்தும் தொலைபேசி சிம் அட்டை அவரது தந்தையாரின் பெயரில் உள்ளமையால் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்காக நேற்று கொழும்பு–01 இல் உள்ள அவர்களது அலுவலகத்துக்கு வருமாறு கிளிநொச்சி அலுவலகத்தின் ஊடாக அழைப்பாணை அனுப்பியிருந்தனர்.

இது தொடர்பில் நேற்றுக் கொழும்பு சென்ற போதே ஊடகவியலாளரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரவிகரனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

முல்லைத்தீவு, ஓக. 07

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்குச் சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்துகடந்த வருடம் ஓகஸ்ட் 2 ஆம்திகதி கவனவீர்ப்புப்போராட்டம்ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையில் மாவட்டக் கடற்றொழில்நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளுக்குத் தமது கோரிக்கைகளை முன்வைக்கச்சென்றபோது நீண்டநேரம் ஆகியும் திணைக்களத்திற்குள் இருந்த அதிகாரிகள் மக்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காது இருந்த நிலையில் அலுவலகம் சேதமாக்கப்பட்டது.

அலுவலகம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், இதில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் 7 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் ரவிகரன் மற்றும் 7 பேரும் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் உள்ளிட்ட 7 பேரும் நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையானதைத் தொடர்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. (ஐ)

# நவ. 15 - 21 இற்கு இடையில் தேர்தல்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

**கொழும்பு, ஓக. 07**

**எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கும் 21ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு நாளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.**

**தேர்தல்கள் ஆணைக்குழுவின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலை நவம்பர் மாதம் 16, 23, 30 ஆகிய திகதிகளில் ஏதாவது ஒரு திகதியில் நடத்துவது என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினமும் ஆராயப்பட்டு மேற்குறிப்பிட்ட கால எல்லை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால எல்லைக்குள் ஓர் திகதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என்றும், 2019ஆம் ஆண்டுவாக்காளர் பட்டியல் இந்தக் காலப் பகுதிக்குள் நிறைவுறுத்தப்படாது என்பதால் 2018ஆம் ஆண்டு வாக்காளர்பட்டியலைப்பயன்படுத்துவதுஎன்றும்முடிவெடுக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்துவதால் 18 வயதைக் கடந்து ஒன்றரை ஆண்டு கடந்தவர்கள் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்பதால் விசேட ஏற்பாடாக 18+ திட்டத்தின் மூலம் 2019ஆம் ஆண்டுவாக்காளர் பட்டியலில் புதிதாகப் பதிவு செய்த தற்போது 18 வயதைத் தாண்டிய புதியவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்கான விசேட திட்டத்தின் கீழ் சட்ட வரைவு ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவரைவை அமைச்சரவை அங்கீரத்தைப் பெற்று நாடாளுமன்றில் நிறைவேற்றுவதன் அடிப்படையில் நடைமுறைப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் மோதி பெண் பலி!

மட்டக்களப்பு, ஓக. 07

மட்டக்களப்பு - மாவடிவேம்பு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

நேற்று முன் தினம் இரவு பாதசாரி கடவை(மஞ்சள்கோடு) ஊடாக வீதியைக் கடக்க முற்பட்ட பெண் மீது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதன் காரணமாக அந்தப் பெண் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சுவிஸ் ஏரியில் மூழ்கி ஈழத்தமிழ்ச் சிறுமி சாவு

பேர்ண், ஓக. 07

சுவிற்சர்லாந்து, நிட்வால்டன் மாநிலத்தில் உள்ள லூசர்ன் ஏரியில், கடந்த ஞாயிறு மாலை ஆறு மணியளவில் ஈழத்தமிழ்ச் சிறுமி ஒருவர் விழுந்து உயிரிழந்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் ராஜ்மதன் சோனா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நிட்வால்டன் மாநிலத்தின் லூசர்ன் ஏரியில் உள்ள அவாசர் ஆற்றின் கரையோரம் தனது உறவினருடன் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் யாரும் எதிர்பாரா நேரத்தில் சிறுமி தண்ணீரில் விழுந்து மூழ்கியுள்ளார். சிறுமியுடன் மற்றுமொருவரும் நீரில் மூழ்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் தம்முடன் சிறுமி இல்லாததை அவதானித்த உறவினர்கள் தேடிப் பார்த்த பின்னர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த அந்நாட்டு பொலிஸார் தேடுதலை மேற்கொண்ட போதும் அது பயனளிக்காத நிலையில் விசேட பயிற்சி பெற்ற அந்நாட்டின் சுழியோடிகள் உலங்கு வானூர்தி மூலம்



வரவழைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் ஆற்றில் ஒன்பது மீற்றர் ஆழத்திலிருந்து சிறுமியும் மேலும் ஒரு நபரும் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட உடனேயே முதலுதவிகள் வழங்கப்பட்டபோதும் அந்தச் சிறுமி அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மீட்கப்பட்ட மற்றுமொரு நபர் உலங்கு வானூர்தி மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்த ஏரியில் இதுவரையில் எவரும் இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழக்கவில்லை எனவும் இதுபோன்ற சம்பவம் இதுவே முதல் தடவை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# சஜித்துக்காக வற்றாப்பளை ஆலயத்தில் ஆயிரம் தேங்காய் உடைத்து வழிபாடு!





முல்லைத்தீவு, ஓக. 07

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துமாறு கோரி வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 250 க்கும் மேற்பட்ட மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய முன்றிலில் ஆயிரம் தேங்காய்களை உடைத்து வழிபாடு மேற்கொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த அவர்கள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடபகுதி மக்களாகிய நாங்கள் அனைவரும் மிகவும் எதிர்பார்ப்புடனும் ஆவலுடன் காத்திருக்கும் ஒரே வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அவரது கட்சி நிறுத்த வேண்டும் என்பதுதான் கோரிக்கை. அவ்வாறு அவர்கள் நிறுத்தத் தவறினால் 2005 ஆம் ஆண்டு போன்று தமிழ் மக்கள் ஒரு சூழலை மீண்டும் உருவாகுவதற்கான வாய்ப்பு உண்டு – என்றனர்.

# சஜித்துடன் கூட்டணியா? மறுக்கிறது சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஓக. 07

சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கவுள்ளதாக வெளியான தகவலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முற்றாக மறுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர இதனை அடியோடு மறுத்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், ‘சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கவேண்டிய அவசியம் சுதந்திரக் கட்சிக்குக் கிடையாது.

பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி சாத்தியமாவதற்கு வாய்ப்பில்லை. தனித்துப் பயணிப்பது தொடர்பாக மத்திய குழு கூட்டத்தில் ஆராயப்படும்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின்போது சஜித் பிரேமதாஸவைப் பிரதமராகப் பதவியேற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி கேட்டிருந்தார்.

இதனை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான உண்மைக்கு புறம்பான செய்திகள் பரப்பப்படுகின்றன. தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து முரண்பாடுகள் எழுந்துள்ளன.

இந்நிலையில், மீண்டும் ஐ.தே.கவுடனோ அல்லது சஜித்துடனோ இனியொரு போதும் சுதந்திரக் கட்சி இணையாது என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம் – என்றார். (ஐ)

# முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தை பார்வையிட்ட ஆளுநர்



கிளிநொச்சி, ஓக. 07

வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்திற்கு நேற்று முன்தினம் இரவு திடீர் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நிர்மாணப் பணிகள் தொடர்பில் ஆராய்ந்தார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir


# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து டேல் ஸ்டெயின் ஓய்வு!

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின், சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுப் பெற்றுள்ளார்.

எனினும், 36 வயதான டேல் ஸ்டெயின், ஒருநாள் மற்றும் ரி – 20 போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்காக தொடர்ந்தும் விளையாட உள்ளார் என தெரிவித்துள்ளார்.



தனது ஓய்வு குறித்து ஸ்டெயின் கூறுகையில், நான் மிகவும் விரும்பி விளையாடிய டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறேன். இம்முடிவு எனக்கு மன வருத்தத்தை ஏற்படுத்துகிறது. கிரிக்கெட்டில் டெஸ்ட் தான் மிகச் சிறந்தது. இதில் தான் உடலளவிலும், மனதளவிலும், திறனளவிலும் மிகப் பெரிய சவால்கள் காத்திருக்கும்.

மேலும், சில காலம் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்று விரும்பியதால் இம்முடிவை எடுத்துள்ளேன். இதன் மூலம் ஒருநாள் மற்றும் ரி – 20 போட்டிகளில் அதிக கவனம் செலுத்த முடியும். எனது கிரிக்கெட் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து தென்னாபிரிக்க அணிக்காக விளையாட விரும்புகிறேன்' எனக் கூறியுள்ளார்.

ஸ்டெயினின் ஓய்வு குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் தலைவர் தபாங் கூறுகையில்,

டேல் ஸ்டெயின் மிகவும் சிறப்பான பந்துவீச்சாளர். அவர் தனது முதல் டெஸ்ட் போட்டியில் மைக்கேல் வாகனை ஆட்டமிழக்க செய்தது முதல் தற்போது வரை சிறப்பாகவே பந்துவீசி வந்தார். இவர் தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் முக்கியமான ஒரு நபராக இருந்தார். இவர் இனி வரும் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு முன்னோடியாக திகழ்வார் எனக் கூறியுள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமான ஸ்டெயின், இதுவரை 93 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

22.95 சராசரியுடன் மொத்தம் 439 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதன்மூலம் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய தென்னாபிரிக்க பந்துவீச்சாளராக முதலிடத்தில் உள்ளார்.

ஒரு டெஸ்ட் போட்டியில் 60 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 11 விக்கெட்டுகளைச் சாய்த்ததும், ஓர் இன்னிங்ஸில் 51 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதும் அவரது சிறந்த பந்துவீச்சாகும். 26 முறை 5 விக்கெட்டுகளுக்கும் மேல் வீழ்த்தியுள்ளார்.

மேலும், சர்வதேச அளவில் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் இவர் 8ஆவது இடத்தில் உள்ளார்.

எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த புயல் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின், கடந்த 2015ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தோள் பட்டையில் காயம் அடைந்தார்.

இதன்பிறகு இந்த காயம் அவருக்கு தொடர்ந்து பிரச்சினைகளைக் கொடுத்தபோது, இதற்காக அறுவை சிகிச்சை மேற்கொண்டார்.

இதனையடுத்து மீண்டெழுந்த ஸ்டெயின், அதன்பிறகு களம்புகுந்த போதும் அவரை காயம் விடாது வாட்டியது. 2015ஆம் மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மீண்டும் ஸ்டெயின் காயத்தால் அவதிப்பட்டார். பின்னர், 2018ஆம் மீண்டும் வெற்றிகரமாகத் திரும்பினார்.

அந்த வருடம் டெஸ்ட் அரங்கில் ஜொலித் தஸ்டெயின், பின்னர் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் இடம்பெற்றார்.

அத்தோடு, உலகக்கிண்ணத் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டியிலிருந்து ஓய்வுப் பெறுவதாகவும் அறிவித்தார். ஆனால் துரதிஷ்டவசமாக காயம் காரணமாகத் தொடர் தொடங்குவதற்கு முன்பாகவே வெளியேறினார்.

எதிர்வரும் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் ரி –20 உலகக் கிண்ண தொடருடன் ஓய்வு பெறும் திட்டத்தில், ஸ்டெயின் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என கூறப்படுகின்றது.

# ஆஸ்திரேலியா அபார வெற்றி




இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் மோதிக் கொள்ளும் ஆஸ் தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா அணி 251 ஓட்டங்களினால் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியா அணி 1 – 0 எனும் அடிப்படையில் முன்னிலை வகிக்கின்றது.

பல கோடி இரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் கடந்த 1 ஆம் திகதி பர்மிங்ஹாம் – எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 284 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அவ்வணி சார்பாக ஸ்டீவ் ஸ்மித் 144 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஸ்டுவர்ட் பிரோட் 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 374 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாக ரோரி பேர்ன்ஸ் 133 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக பாட் கம்மின்ஸ் மற்றும் நாதன் லியோன் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதனை தொடர்ந்து 90 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய ஆஸ்திரேலியா அணி 487 ஓட்டங்களைப் பெற்றபோது தனது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

அவ்வணி சார்பாக ஸ்டீவ் ஸ்மித் 142 ஓட்டங்களையும் மத்தேயு வேட் 110 ஓட்டங்களையும் பெற்றுக்கொள்ள பென் ஸ்டோக்ஸ் 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து 398 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 146 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதனால் ஆஸ்திரேலியா அணி 251 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்றது.

ஆஸ்திரேலியா அணி சார்பாக பந்துவீச்சில் நாதன் லியோன் 6 விக்கெட்களை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக இரு இன்னிங்ஸிலும் சிறப்பாக விளையாடிய ஸ்டீவ் சிமித் தெரிவு செய்யப்பட்டார்.

# இழந்த இடத்திற்கு மீள வந்துள்ளேன் - ஸ்மித்

தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஊக்கத்தினால் இழந்த இடத்தை மீண்டும் அடைந்துள்ளேன் என ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

பர்மிங்காமில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸின் முதல் போட்டியில், ஆஸ்திரேலிய அணி 251 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த டெஸ்டில் ஸ்டீவ் ஸ்மித் முதல் இன்னிங்ஸில் 144 ஓட்டங்களும், 2வது இன்னிங்ஸில் 142 ஓட்டங்களும் விளாசினார்.

இதன்மூலம், பந்தை சேதப்படுத்திய விவகாரத்தால் ஓர் ஆண்டு காலம் தடையில் இருந்த ஸ்மித், தற்போது மீண்டு வந்துள்ளார். இந்நிலையில் இந்த வெற்றி குறித்து அவர் கூறுகையில்,

'மீண்டும் ஓர் ஆஷஸ் தொடரில் வெற்றி பெற்றது சிறப்பான ஒன்று. இங்கிலாந்தில் விளையாடுவது மிகவும் பிடித்திருக்கிறது. இந்த புற சூழல் பிரமாதமாக உள்ளது. எங்கள் அணி வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர். தொடரின் முதல் போட்டியிலேயே வென்றது ஊக்கமளிக்கிறது.

ஆஸ்திரேலியா மீண்டும் விளையாடுவதும், வெற்றியில் பங்குபெறுவதும் பெருமையாக இருக்கிறது. நான் ஆஸ்திரேலியாவுக்காக முதல் சதத்தை அடிக்கும்போது எப்படி உணர்ந்தேனோ, அந்த அளவிற்கு தற்போது மகிழ்ச்சியாக உள்ளேன்.

18 மாதங்கள் தடையில் இருந்தபோது எனது நண்பர்கள், குடும்பத்தினர் அளித்த ஊக்கத்தினால் மீண்டும் நான் இழந்த இடத்தை அடைந்துள்ளேன். எங்களின் இந்த வெற்றி தொடரும் என நம்புகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# பயிற்சியாளர் பதவியிலிருந்து சந்திக ஹத்துருசிங்க நீக்கம்

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியில் இருந்து சந்திக ஹத்துருசிங்க நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு பதிலாக இலங்கை அணியின் இடைக்காலப் பயிற்சியாளராக ஜெரோம் ஜெயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கை கிரிக்கெட் சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திக ஹத்துருசிங்கவை பங்களாதேஷ் அணியுடனான ஒருநாள் தொடரின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலக, இலங்கை கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்திருப்பதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் தலைமைப் பயிற்சியாளர் பதவியில் இருந்து சந்திக ஹதுருசிங்க நீக்கப்பட்டுள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது.




ஹத்துருசிங்கவிற்கு இன்னும் 16 மாதங்கள் இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராகச் செயற்பட முடியும். எனினும், இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர்கள் பதவி விலக வேண்டும் என இலங்கையின் விளையாட்டு அமைச்சர் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir



## நானே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தால் கட்சியைத் துண்டாக்க நான் விரும்பவில்லை. கட்சியை விட்டு வெளியேறும் எண்ணமும் எனக்கில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்காகவும் நாட்டுக்காகவும் எனது தந்தை உயிரையே அர்ப்பணித்துள்ளார். எனவே, கட்சிக்குத் துரோகமிழைக்க நான் விரும்பவில்லை.

கடந்த ஒக்டோபர் மாதம் அரசியல் சூழ்ச்சியின்போது நானே ஜனாதிபதி வேட்பாளர் என்று கட்சியின் தலைவர் எனக்கு வாக்குறுதி தந்திருந்தார். அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் தானே மீண்டும் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளதாகவும் அவர் அப்போது என்னிடம் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக நானே களமிறங்குவேன். அதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவே களமிறங்குவார். ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறுவது உறுதி.

ஜனாதிபதித் தேர்தலைவைத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்திக் குளிர்காய சிலர் முயல்கின்றனர். அது ஒருபோதும் நடக்காது – என்றார். (ஐ)

## கோட்டாவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கப்பல்துறை அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், கோட்டாபயவை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்தார் என்றும், அது பகல் வெளிச்சத்தில் வெளிப்படையாக நடந்த சந்திப்பே என்றும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் நடந்த இந்தச் சந்திப்பு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள அமைச்சர் சாகல ரத்நாயக்க,

அறுவை சிகிச்சைக்குப் பின்னர் நாடு திரும்பிய அவரை நான் சந்தித்தேன். சந்திப்பு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முழுமையாக அறிந்திருந்தார்.

நான் அவரது வீட்டிற்குப் பாதுகாப்பு அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டேன். அப்போது, அமைச்சர் கபீர் காசிமும், முன்னாள் பாதுகாப்புச் செயலரின் அறையில் இருந்தார்.

அமைச்சர் கபீர் காசிம் ஏன் அங்கு வந்திருந்தார் என்று விசாரிப்பது எனது கடமை அல்ல. நான் அங்கு சென்ற சிறிது நேரத்திலேயே அவர் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

கோட்டாபயவுடன் அவரது உடல்நிலை குறித்து நான் சுருக்கமாக உரையாடினேன். அந்தச் சந்திப்பில் அரசியல் எதுவும் பேசப்படவில்லை.

இது ஒரு மனிதாபிமானச் சந்திப்பு மட்டும் தான். அரசியல் போட்டியாளர்களாக இருந்தாலும் நாங்கள் எதிரிகள் அல்லர்.

எனது அரசியல் போட்டியாளர்களுடன் நான் எப்போதும் நட்புறவைப் பேணி வருகிறேன். நாகரிகமான முறையில் அரசியலில் ஈடுபடுவது முக்கியம்.

ஏனைய பலரையும் போன்று, நான் எனது அரசியல் போட்டியாளர்களுடன் மூடிய கதவுச் சந்திப்புகளை நடத்துவதில்லை.

நான் அவர்களைச் சந்திக்கும் போதெல்லாம், கட்சித் தலைமைக்கு முன்பே அறிவித்து, அனுமதியைப் பெறுகிறேன்– என்றார். (ஐ)

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை 6.10 மணிளவில் தெரிவுக் குழு முன்னிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாட்சியமளித்தார். முன்னதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவும் சாட்சியமளித்திருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சாட்சியத்தில் தெரிவித்தவை வருமாறு:–

சட்டம் ஒழுங்கு அமைச்சின் ஊடாகவும் பாதுகாப்பு அமைச்சின் ஊடாகவும் தேசியப் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் எனக்கு கிடைத்து வந்தன. எனினும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து எந்தப் புலனாய்வுத் தகவலையும் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு பெற்றுக் கொள்ளவில்லை.

காத்தான்குடியில் அடிப்படைவாதம் இருப்பதை அரசியல் தலைவர் என்ற வகையில் அறிந்திருந்தேன். துருக்கி அமைப்பு ஒன்று அங்கு இருப்பதாகவும் தகவல் கிடைத்திருந்தது. எனினும் அந்த அமைப்பால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவிக்கப்படவில்லை.

தேசியப் பாதுகாப்புச் சபையில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகள் பங்கேற்பார்கள். தேவையேற்பட்டால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் அழைப்படுவார்.

இந்த ஆண்டு பெப்ரவரிக்குப் பின்னர் பாதுகாப்புச் சபை கூட்டப்படவில்லை. ஆர்ப்பாட்டங்கள், அடிப்படைவாதம், விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி பற்றிய தகவல்கள் எனக்கு வழங்கப்பட்டு வந்தன. எனினும் பயங்கரவாத அமைப்பு – தாக்குதல்கள் பற்றி எவையும் எனக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. எனது பாதுகாப்புப் பிரிவுக்கும் அது வெளிப்படுத்தப்படவில்லை.

சஹ்ரான் காசிமை கைது செய்வதற்கான நடவடிக்கையை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் 2018ஆம் ஆண்டே முன்னெடுத்திருந்தனர். எனினும் அவர் வெளிநாட்டுக்குத் தப்பித்து விட்டார் என்ற அடிப்படையிலேயே பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

சட்டம் ஒழுங்கு அமைச்சு என்னிடம் 2 வாரங்கள் மட்டுமே இருந்தது. பயங்கரவாத அமைப்புக்களைத் தடை செய்து அந்த அமைப்புக்களைச் சேர்ந்தோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்குப் போதுமான சட்டங்கள் இயற்றப்படவில்லை என்பது தான் எனது கருத்து.

மதரசா பாடசாலை தொடர்பில் ஒருஒழுங்குமுறைஇருக்கவில்லை. வெளியில் இருந்து வந்தவர்களே தாக்குதல்களை நடத்தினார்கள் என்ற விடயம் தாக்குதல்களின் பின்னரே தெரிய வந்தது. அவை பற்றி அமைச்சரவையில் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

தாக்குதல்கள் நடத்தப்பட்டவுடன் பாதுகாப்புச் சபையை நான் கூட்டினேன். பாதுகாப்பு அமைச்சுக்கு நேரில் சென்று பாதுகாப்புச் சபையைக் கூட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தேன்.

பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள் சிலவற்றுக்கு எனக்கு அழைப்புக் கிடைக்கவில்லை. நான் பாதுகாப்புச் சபைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றால் பாதுகாப்புச் சபை கூடியிருக்க முடியாது. எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர் பல வாரங்களாக பாதுகாப்புச் சபை கூட்டப்படவில்லை என்று அறிந்துகொண்டேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சில நாள்களுக்கு முன்னர் காத்தான்குடியில் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக அறிந்துகொண்டேன். அதுபற்றி விசாரணை நடத்தச் சொன்னேன். எனினும் அதுபற்றி எனக்கு எந்த விவரங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

நாட்டின் பாதுகாப்புத் துறையில் ஒழுங்கான கட்டமைப்பு இல்லாமை காரணத்தினால்தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைத்து விசாரணை நடத்தத் தீர்மானித்தோம்.

சட்டம் ஒழுங்கு அமைச்சுக்கு அனுபவம் வாய்ந்த ஒருவர் நியமிக்கப்படவேண்டும். அதனை நாம் வலியுறுத்தியும் இருந்தோம்.

அடிப்படைவாதம் மூலம்தான் பயங்கரவாதத்துக்கு மாறுகின்றனர். இந்த இரண்டுக்கும் இடையே உள்ள காலத்தை புலனாய்வுத் துறை கண்டறியவேண்டும். அதனை எமது புலனாய்வுத் துறை உரியவாறு முன்னெடுக்க வேண்டும். எனினும் புலனாய்வுத் துறை அதனைத் தவறவிட்டமை பாரதூரமான குறைபாடாகும்.

இந்த பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புபட்ட பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேரடி தொடர்பில் மட்டும் அல்ல, என்ன வகையிலேனும் தொடர்புபட்ட நபர்கள் என்றால் அவர்களைக் கைதுசெய்து விசாரிக்க வேண்டும் என கோரியுள்ளோம்.

ஒரு குழு அழிக்கப்பட்ட காரணத்தினால் பிரச்சினை முடிந்ததாக கூற முடியாது. இது புற்றுநோய் போன்றது. ஒரு குழு முடிந்துவிட்டது எனத் திருப்தி கொள்ள முடியாது. வேறு யார் உள்ளனர் என்பதை கண்டறிய வேண்டும். யாரின் கொள்கை உருவாகின்றது. ஆயுதம் என்பது துப்பாக்கி மட்டும் அல்ல வேறு எதனையும் பயன்படுத்த முடியும்.

புதிய பயங்கரவாத யுகத்தில் உள்ளதாக் அதற்கான சட்டங்களை உருவாக்கவேண்டும். தனி நபரால் கூட முடியும். இது புற்றுநோய் போன்றது. ஆகவே இதில் நாம் அவதானமாக இல்லாத நிலையில் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

இன்று நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் சீராக உள்ளன. சோல்பரி அரசியல் அமைப்பில் இருந்தே அமைதியையும் நல்லாட்சியையும் வலியுறுத்தியுள்ளனர். பின்னர் நாம் அதனை நீக்கிவிட்டோம். ஆனால் முதலில் அமைதியான சூழலும் நல்லாட்சியும்தான் வேண்டும்.

இது புற்றுநோய். ஆகவே இது முடிவுக்கு வராத வகையில் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். சஹ்ரான் தமிழில் பரப்புரை செய்வதால் இலங்கைக்கு மட்டும் அல்ல தென்னிந்தியாவுக்கும் பெரும் அச்சுறுத்தல். ஆகவே தான் அவர்கள் அக்கறை செலுத்துகின்றனர் – என்றார். (ஐ)

## கோட்டாவே ஜனாதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதில், ஐக்கிய தேசியக் கட்சியில் நெருக்கடி தோன்றியுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியில் 5 ஜனாதிபதி வேட்பாளர்கள் உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த 5 வேட்பாளர்களுமே எதிர்கால ஜனாதிபதி என்ற எண்ணத்தில் தமது நடை, உடையில் மாறத் தொடங்கிவிட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## எம்.பிக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

சிறந்த அரசியல் கலாசாரமொன்றுக்காக முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகள் நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் கையளிக்கும் தேசிய நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுப் பிற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கிடைக்கும் சலுகைகள் மற்றும் உரிமைகள் வரம்பற்றவை.

இன்று (நேற்று) காலை அமைச்சரவைக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூடுதல் கொடுப்பனவு வழங்குவதற்கான திட்டத்தை அரசு முன்வைத்தது.

இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்குக் கூடுதலாக இரண்டு லட்சம் ரூபா வழங்க முன்மொழியப்பட்டது. எனக்கு ஒரு பெரிய அழுத்தமும் வழங்கப்பட்டது.

தற்போது மாதம் ரூ .4 லட்சத்துக்கு மேல் பெறும் எம்.பிக்களுக்கு மேலதிகமாக இப்படி வழங்கும் யோசனைக்கு என்னால் கையெழுத்திட முடியாது என்று சொன்னேன். – என்றார். (ஐ)

## ரவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிபரின் அறிக்கை மற்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு ஒப்புதல் அளித்த அறிக்கை ஆகியவற்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மின் மற்றும் எரிசக்தி அமைச்சர் ரவி கருணநாயக்கவை அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

கொழும்பு துறைமுகம் மற்றும் காலித் துறைமுகத்தில் இரண்டு கப்பல்களில் நிறுவப்பட்ட இரண்டு மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து 320 மெகாவாட் மின்சாரம் கொள்வனவு செய்ய அமைச்சர் ரவி கருணாநாயக்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு நிதியமைச்சர் மங்கள சமரவீர ஆட்சேபனை தெரிவித்தார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த யோசனைக்குச் சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கவில்லையென அமைச்சர் மங்கள இங்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (ஐ)

## குஞ்சுக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சம்பவம் நேற்று இடம்பெற்றது.

குஞ்சுக்குளம் பகுதியில் இருந்து செட்டிகுளம் நோக்கிச் சென்ற வாகனம் ஒன்றைச் செட்டிகுளம் – குஞ்சுக்குளம் பிரதான வீதியில் இருந்த சோதனைச் சாவடியில் நிறுத்திச் சோதனை செய்தபோது 6 பொதிகளைக் கொண்ட 8 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், வாகனமும் மீட்கப்பட்டது. அந்த வாகனத்தில் பயணித்த மூவரும் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மடுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ–100)

## யாழ். மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பட்டன. அவற்றில் 76 உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்பட்டுள்ளன. 12 உணவகங்களில் காணப்பட்ட நுகர்வுக்கு தகுதியற்ற உணவுகள் அழிக்கப்பட்டதுடன், 26 உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த திடீர் சோதனை நடவடிக்கை வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் அறிவுறுத்தலுக்கு அமைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்டன என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக யாழ்ப்பாணம் மாநாகர சபையின் எல்லைக்குட்பட்ட 107 உணவகங்களுக்கு பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளால் நேற்றுத் திடீர்க் கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

உணவகங்களின் தரம் மற்றும் சட்டத்திற்கமைவாக இயங்குகின்றனவா என்று மேற்கொள்ளப்பட்ட இந்த கண்காணிப்பு நடவடிக்கையின்போது 76 உணவகங்களில் சுகாதார சீர்கேடுகள் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் அதிகளவிலான சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்ட 26 உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் 12 உணவகங்களில் காணப்பட்ட தகுதியற்ற உணவுகள் அழிக்கப்பட்டன.

மேலும், சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்பட்ட உணவகங்களுக்கு மிகதகுதிவாய்ந்த உணவகங்களாக மாற்றியமைப்பதற்கான கால அவகாசம் பொதுச் சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்டதுடன் அவ்வாறு தவறும் பட்சத்தில் குறித்த உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஆளுநரின் தனிப்பட்ட செயலணி உறுப்பினர்கள் 21பேர் ஒவ்வொரு அணியையும் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்பட்டதுடன் எட்டு பிரிவாக 51 பொதுச் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கை குறிப்பாக நல்லூர் மகோற்சவ திருவிழாவினை முன்னிட்டு மக்களின் நலன்கருதி சுத்தமான உணவுகள் வழங்கப்படவேண்டும் என்ற நோக்கில் ஆளுநரால் அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது – என்றுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தும் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்தகாலங்களில் பாதுகாப்புச் செயற்பாடுகள் மந்த நிலையில் கையாளப்பட்டன என்பதை நான் உணர்கிறேன். பாதுகாப்பு அமைச்சு விடயத்தில் நிலையானதும் உறுதியானதுமான நிலைப்பாடு இருக்கவில்லை. ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாடுகளே இதற்கான காரணம் என நான் நினைக்கிறேன். அதேபோல் நான் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்தாலும் எனக்குத் தீர்மானம் எடுக்கும் அதிகாரங்கள் இருக்கவில்லை – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# நல்லூர் கந்தசுவாமி திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்!










யாழ்ப்பாணம், ஓக. 07
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி மாலை 5 மணிக்கு வைரவர் உற்சவத்துடன் திருவிழா நிறைவுக்கு வரும்.
அனைத்து ஏற்பாடுகளுடனும் திருவிழா நேற்று ஆரம்பமாகியுள்ளது. பாதுகாப்புச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஆலயச் சூழலில் தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.
ஆலயத்துக்கான வீதிகளில் வாகனத் தடைகள் ஏற்படுத்தப்பட்டு, மாற்று வீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ–07)







# பழிவாங்கலையும் இனவாதத்தையும் ஒழித்தால் நாடு அபிவிருத்தி அடையும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 07

அரசியல் பழிவாங்கல் மற்றும் இனவாதத்தை இல்லாதொழித்தால், இலங்கையை இலகுவாக அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டுச்செல்ல முடியுமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் மற்றும் திகன கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சிக்காக அனைவரும் மேற்கொண்ட தியாகங்களுக்காக நாம் நன்றிகளைத் தெரிவிக்கவேண்டிய பொறுப்பில் இருக்கிறோம்.

ஆனால், இந்த இழப்பீடுகளை வழங்கச் சிறிது காலம் தாமதம் ஏற்பட்டதையிட்டு நாம் இவ்வேளையில் எமது கவலையை தெரிவித்துக் கொள்கிறோம்.

இருந்தாலும், நாம் கொடுத்த வாக்குறுதியிலிருந்து மீறக்கூடாது என்பதற்காகத் தற்போது இதனை மேற்கொண்டுள்ளோம்.

பாலித ரங்கே பண்டாரவும், அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகியுள்ளார். இதனால் அவருக்கு இன்று அமைச்சுப் பதவியும் இல்லாது போயுள்ளது.

இன்னொரு தரப்பினர் இனவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிலர் இனவாதத்தை வைத்து வெற்றியடைந்துவிட முடியும் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்காக அனைவரும் ஒன்றிணையவேண்டும். அவ்வாறான தொரு நாட்டைக் கட்டியெழுப்ப அரசியல் பழிவாங்கல்களைக் கைவிடவேண்டும்.

வளர்ச்சியடைந்த எந்தவொரு நாட்டிலும் அரசியல் பழிவாங்கல் இருப்பதில்லை. இனவாதமும் இருப்பதில்லை.

அனைத்துத் தரப்பினரின் உரிமையும் பாதுகாக்கும் வகையில் செயற்படவேண்டும். அரசியல்பழிவாங்கல் மற்றும் இனவாதத்தை நாம் கைவிடுவோமாக இருந்தால் நாம் நிச்சயமாக அபிவிருத்திப் பாதையை நோக்கிப் பயணிக்க முடியும் –என்றார்.

# நல்லூரைத் தரிசிக்க வரும் பக்தர்கள் சோதனைகளின் பின்னரே அனுமதி!










யாழ்ப்பாணம், ஓக. 07

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகிய நிலையில் அடியவர்கள் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டே அனுமதிக்கப்பட்டனர்.

பெண் பக்தர்கள் சோதனைக்கூடங்களுக்கும் ஆண்கள் வெளியிலும் உடல் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அத்துடன், சில நுழைவாயில்களில் பொலிஸார் ஸ்கானர் மூலம் உடல் சோதனைகளை முன்னெடுக்கின்றனர்.

மேலும் அடியவர்களால் எடுத்துச் செல்லப்படும் உடைமைகளும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2019 இல் வெளியிடப்பெற்றது.